நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI

සුදියපූමි

சுற்று 05 ஜூலை 1998 பக்கம் 8 விலை ரூபா 10/= சுழற்சி 21

புதிய இடதுசாரி முன்னணி


# யுத்தத்தை எதிர்த்து தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி

# புதிய இடதுசாரி முன்னணி தேர்தலில் போட்டி

**யுத்தத்தை எதிர்த்து அரச அடக்குமுறையை எதிர்த்து, தனியார் மயத்தை எதிர்த்து புதிய இடதுசாரி முன்னணி மாகாணசபை தேர்தலில் போட்டியிடுகிறது. நுவரெலியா, மாத்தளை, மொனராகலை, களுத்துறை, கொழும்பு உட்பட பல மாவட்டங்களில் போட்டியிடுகிறது. நுவரெலியா மாவட்டத்தில் புதிய ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் இ. தம்பையாவின் தலைமையிலும், கொழும்பு மாவட்டத்தில் நவ சமசமாஜக்கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தலைமையிலும் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான புதிய இடதுசாரி முன்னணியின் சின்னம் மேசை ஆகும்.**

இன்றைய நிலைமையில் தமிழ் மக்களுக்காகவும், முஸ்லிம் மக்களுக்காகவும், சிங்கள மக்களுக்காகவும் அரசியல் போராட்டங்களை முன்னெடுக்கக் கூடிய ஒரே அமைப்பாக புதிய இடதுசாரி முன்னணி மக்கள் முன்வந்துள்ளது. இலங்கையின் எல்லா மக்களுக்கும் நம்பிக்கை கொடுப்பதாக தோன்றியுள்ள இம்முன்னணி மக்களின் ஆதரவை பெற்று முன் செல்லும் என்பதில் சந்தேகமே இல்லை.

அதிகாரப் பரவலாக்கல் என்ற அடிப்படையில் மாகாணசபைகளை ஏற்றுக் கொண்ட இம்முன்னணி இந் நாட்டிலுள்ள எல்லா தேசிய இனங்களினதும் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யும் அடிப்படையில் அவற்றின் சுயாட்சியை வென்றெடுப்பதை பிரதான குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய, மேல், ஊவா, சப்ரகமுவ, வடமத்திய் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். அதன்படி உரியவாறு தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே ஜனநாயகத்தை நேசிக்கும் மக்களினது விருப்பமாகும். அரசாங்கத்தின் அமைச்சரவையும் தேர்தலை நடத்துவது என்றே முடிவெடுத்துள்ளது.

ஆனால் அமைதிக்கு பங்கம் ஏற்படும் நிலை தோன்றினால் அவசர காலநிலையை பிறப்பிப்பதாக அமைச்சரவை முடிவெடுத்துள்ளது. இந்த முடிவை சாதகமாக வைத்துக்கொண்டு அரசாங்கம் விரும்பியவாறு தேர்தலை ஒத்திவைப்பதாக அல்லது நடத்தாமல் விட்டால் மக்களின் எதிர்ப்பை எதிர் கொள்ள வேண்டிவரும். தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்ற விருப்பத்தை பௌத்த பிக்குமாருக்கூடாகவும், சில அமைச்சர்களுக்கூடாகவும் அரசாங்கம் வெளிப்படுத்தியிருந்தது. இ.தொ.கா. தலைவர் தொண்டமான், அதன் எம்பிக்களில் ஒருவரான பிபி தேவராஜ் போன்றோரும் கூட மாகாணசபை தேர்தலை ஒத்தி வைப்பது நல்லது என்றே கூறிவந்தனர். மக்கள் எதிர்க்கிறார்கள் என்பதால் அரசாங்கம் ஒத்திவைக்கும் நிலைப்பாட்டை கைவிட்டுள்ளது.

அவசரகால நிலையை பிரகடனப்படுத்தி தேர்தலை ஒத்தி வைக்கலாம் என்ற முடிவையும் அரசாங்கம் எடுத்திருப்பது என்பது அரசாங்கத்துக்கு தேவையானால் ஒத்தி வைக்கும் எண்ணத்தை இன்னும் கைவிட்டு விட்வில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தி விட்டு தேர்தலை ஒத்தி வைக்க அரசாங்கம் முயற்சிக்குமானால் அதனை எல்லா ஜனநாயக, முற்போக்கு, இடதுசாரி சக்திகள் எதிர்க்க வேண்டும். ஒத்தி வைக்கும் முயற்சிகள் நாட்டில் அமைதியை குலைக்குமேயன்றி அமைதியை நிலைநாட்ட உதவாது. வடக்கு கிழக்கு மாகாணசபை தேர்தலை அவசரகால சட்டத்தை பயன்படுத்தி ஒத்தி வைத்ததால் ஏற்பட்ட விளைவை நாடே அனுபவித்துக் கொண்டிருக்கிறது. தேர்தல் என்ற ஜனநாயக உரிமையை மறுப்பதனால் தான் அமைதி குலையும், அதிகாரத்துவம் தலைதூக்கி மக்களின் சாதாரண உரிமைகளும் மறுக்கப்படும்.

அவ்வாறான நிலைமை தோன்றுமானால் அதற்கு எதிராக புதிய இடதுசாரி முன்னணி மக்கள் இயக்கத்தை வளர்த்து ஜனநாயக மறுப்புக்கும், யுத்தத்திற்கு எதிராக போராட வேண்டும் என்பதே எமது விருப்பம்.

# தோண்டப்பட்ட சூரியகந்தையும் திறக்கப்படாத செம்மணியும்

வடக்கே யாழ்ப்பாண நகரத்தின் கண்டி வீதியின் ஊடான நுழைவாயில் தான் செம்மணிப்பகுதி. உப்புத் தரவைகள் நிறைந்த மணற்பாங்கான பகுதி. மழைகாலங்களில் வெள்ளம் ஓடிநிற்கும் பகுதி. அங்கே தான் நாட்டின் கவனத்தை ஈர்த்த மாணவி கிரிசாந்தியும், தாயாரும், சகோதரனும், அயலவருமாக நான்கு பேர் ராணுவப் பொலிசால் கொன்று புதைக்கப்பட்ட இடம். இக்கொலைகளில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நீதிமன்றம் சிறையும், மரணதண்டனையும் தீர்ப்பாக வழங்கி உள்ளது. அந்த எதிரிகளில் ஒருவர் வழங்கிய சாட்சியத்தில் அதே செம்மணிப் பகுதியில் மேலும் நானூறு சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாகக் கூறியதுடன் தன்னால் அவ்விடங்களை அடையாளம் காட்ட முடியும் எனவும் கூறி உள்ளார்.

அவரது கூற்றினை நம்பாது இருந்து விட முடியாது. ஏனெனில் ஏறத்தாள கிரிசாந்தியும் ஏனையோரும் கொன்று புதைக்கப்பட்ட அதே காலப்பகுதியில் தான் வடக்கே அறுநூறு பேர்வரை காணாமல் போய் உள்ளனர் என்பது ஏற்கனவே வெளிவந்தாகும். இந்த அறுநூறு பேரைக் கண்டு பிடித்துத் தாருங்கள் அல்லது அவர்களுக்கு நடந்தவற்றை எமக்குத் தெரியப்படுத்துங்கள் என பெற்றோர் உறவினர் என்போர் கண்ணீரும் கம்பலையுமாக எடுத்த முயற்சிகள் எதுவும் பயன்தரவில்லை. இராணுவ விசாரணைக்குழு மிகக்குறைந்த தொகையினரே காணாமல் போய் உள்ளதாக விசாரணை புள்ளி விபரம் காட்டினர். ஜனாதிபதி இதற்கு ஒரு ஆணைக்குழு நியமிப்பதாகக் கூறி சமாளித்துக் கொண்டார். ஆனால் அறுநூறு பேர்களை இழந்து நிற்கும் பெற்றோர், மனைவிமார், குழந்தைகள் மற்றும் உறவினர் நாளாந்தம் ஏக்கப் பெரு மூச்சுடனும் ஏனைய பாதிப்புகளுடனும் நோய்களுக்கும் உள்ளாகி வருகிறார்கள். ஒரு சிலர் தற்கொலைகளும் செய்துள்ளார்கள்.



இந்நிலையில் தான் செம்மணியில் 400 புதைகுழிகள் இருப்பதாகவும் அவற்றை தம்மால் அடையாளம் காட்ட இயலும் எனவும் நீதிமன்றத்தில் கூறியுள்ள கூற்று பெரும் அதிர்ச்சி அலைகளைத் தோற்றுவித்துள்ளது.

அவரது கூற்றினை நீதி நிறுவனங்களும் மனித உரிமை அமைப்புகளும் நீதி வேண்டி நிற்கும் அரசியல் கட்சிகளும் முழுக்கவனத்தில் எடுத்துக் கொள்ளல் வேண்டும். அன்று சூரியகந்தைப் புதை குழிகளைத் திறக்க இன்றைய ஜனாதிபதியே முன்னின்று செயலாற்றினார். அன்று அப்புதைகுழிகளைத் திறந்த தேவதை போன்று காட்சி கொடுத்த சந்திரிகா அம்மையார் இன்று ஜனாதிபதி பதவி பெற்ற பின் அவரது ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட செம்மணிப் புதைகுழிகளை எந்த ரூபத்தில் நின்று எதிர் நோக்கப்போகிறார். அதனை திறக்க உத்திரவிடப் போகிறாரா அல்லது அவற்றை மூடி வைக்க முற்படுவாரா? அறுநூறு பேரின் மறைவில் துப்புக்கிடையாதா என ஏங்கி நின்ற வடபகுதி மக்களுக்கு மட்டுமன்றி நீதி கோரிநிற்கும் அனைத்து மக்களுக்கும் நம்பத் தகுந்த ஒரு துப்புக் கிடைத்துள்ளமை திருப்தி அளிக்கின்றது. ஆனால் சூரியகந்தை போன்று செம்மணியும் புதைகுழிகள் திறக்கப்படுமா? என்பதே கேள்வியாகி நிற்கின்றது.

நன்றி - நூலகத்திட்டம்



# பகத்சிங் உயிரோடு இருந்தால்...

சில நாட்களுக்கு முன்பு இந்தூரில் பகத்சிங்கின் சிலை திறக்கப்பட்டது. மிகப் பெரிய விழாவாக இது நடத்தப்பட்டது.

பூப்பூவாகச் சொரியும், நீர்க்குழாய்களுக்கு நடுவே அழகான சிலையைச் செய்து திறப்பு விழாவை நடத்தினார்கள். பிரச்சனை அதுவல்ல.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பே, பகத்சிங்கின் சிலையை வைக்க வேண்டும் என்று இந்தூர் மாநகராட்சி முடிவெடுத்திருந்தது. பின் ஏன் இத்தனை ஆண்டுகள் தாமதமாயிற்று?

பகத்சிங் சிலைக்கு தலைப்பாகை அணிவிப்பதா அல்லது பிரபலமாகியிருக்கும் தொப்பியை அணிவிப்பதா என்ற சர்ச்சை பெரிய தகராறாகி இருந்தது தான் காரணம்.

பகத்சிங்கின் தலையின் மேல் என்ன இருந்தது என்று விவாதித்தவர்கள் அவருடைய தலைக்குள் என்ன இருந்தது என்பதை அறிய விரும்பவில்லை.

பகத்சிங் மற்றும் புரட்சியாளர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த பகவன்தாஸ் மசோர் என்பவர் இது பற்றி குறிப்பிடுகிறார்.

"இந்தப் புரட்சிக் குழுவில் செயலூக்கம் கொண்டவர்கள் ஆசாத், பகத்சிங், ராகதேவ், ராஜகுரு, பதுகேஸ்வர் தத், ஷிவ் வர்மா, விஜயகுமார் சின்ஹா, ஜல்தேவ் கபூர், டாக்டர் கயாபிரசாத், வைஷாம்பாயன் சதாசிங் ஆகியோர் மாற்றுப் பெயர்களில் தங்கி இருப்பார்கள். இவர்கள் தங்கி இருக்கும் இடங்களில் தங்களுக்குள் வேடிக்கையாகப் பேசிக் கொள்வார்கள். ஒரு நாள் ஒவ்வொருவரும் போலீஸ்



கையில் எப்படி சிக்குவார்கள் என்று வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆசாத் (ராஜகுரு) தூக்கம் அதிகம் வேண்டும் என்று நினைப்பவர். நடந்து கொண்டே கூட தூங்க விரும்புவார். ஒரு நாள் பொலீஸ் அவர் நடந்து கொண்டிருக்கும் போதே பிடிக்கப் போகிறார்கள்.

மோசன் (பதுகோஷ்வர் தத்) இயற்கையை அதுவும் நல்ல நிலவொளியில் மரங்களடர்ந்த தோட்டங்களை ரசிப்பவர். போலீசார் பிடித்தாலும் இரவு நிலவொளியை ரசிக்க அனுமதி கேட்பார்.

பச்சு (விஜயகுமார் சின்ஹா), ரஞ்சித் (பகத்சிங்) ஆகியோர் திரைப்படங்களை பார்ப்பதில் பிடித்தமுள்ளவர்கள். இவர்களை போலீசார் திரையரங்குகளில் பிடித்தாலும் முழுப்படத்தையும் பார்த்துவிட்டு போவோமே என்பார்கள்.

பண்டிட் ஜி (சந்திர சேகர ஆஜாத்) யாரையும் எளிதில் நம்புவர். டிண்டல் கமண்ட் மலைகளில் துப்பாக்கியோடு சுற்றுபவர் கூட வருபவன் துரோகி என்பதறியாமல் பிடிபடுவார். ஆனால் ஆசாத் கனமான மனிதர். அவரைத் தூக்கில் போட இரண்டு கயிறுகள் வேண்டும். ஒன்று அவருடைய கழுத்திற்கு, மற்றொன்று அவருடைய பிரமாண்டமான வயிற்றுக்கு.

இப்படி ஆபத்தான நிலையிலும் பேசிக் கொண்டிருப்பார்கள். என்று பகவன் தாஸ் மசோர் கூறுகிறார்.

பகத்சிங் திறப்புவிழா நடந்தது பற்றி ஒரு செய்தி வந்தது.

மணமகன் ஒருவன் நல்ல உடை உடுத்தி திருமண மண்டபத்திற்கு அழைத்து வரப்படுகிறான். வெளியில் அவன் ஏறி வருவதற்காக குதிரை ஒன்று அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

அவன் குதிரையில் ஏற இருக்கும் தருணத்தில் சிலர் வந்து அவன் குதிரையில் ஏறி ஊர்வலமாகச் செல்லக் கூடாது என்று தடுக்கிறார்கள்.

மணமகன் தலித், தடுத்தவர்கள் மேல் சாதிக்காரர்கள்.

பகத்சிங் தூக்கிலிடப்படுவதற்கு முந்தய தினம் கே.பி. முகம்மது அக்பர் அலி தான் சிறை அதிகாரி. பகத்சிங்கிடம் உங்களுடைய கடைசி விருப்பம் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். நிறைவேற்றிக் முயற்சிக்கிறேன் என்கிறார்.

"நான் பேபி தயாரிக்கும் இரண்டு ரொட்டிகளைச் சாப்பிட விரும்புகிறேன்" என்கிறார் பகத்சிங்.

பேபி என்றால் தாயார் என்று பொருள். மற்றொரு பொருளும் உண்டு. பகத்சிங் அடைபட்டிருக்கும் சிறைச்சாலை கழிப்பிடங்களை சுத்தம் செய்யும் சாதியினரையும் அப்படித்தான் அழைப்பார்களாம்.

சிறை அதிகாரி கழிப்பறை சுத்தம் செய்பவளை அழைத்து வருகிறார். அவள் பகத் சிங்கிடம் "அய்யா! என்னால் உங்களுக்கு ரொட்டி தயாரிக்க முடியாது. என் கையில் அசுத்தம் ஒட்டிக்கொண்டிருக்கும்" என்கிறார்.

என்தாய் என்மலத்தை கழுவிய கையால் நான் உண்டவன். நீ ரொட்டி சுட்டுத் தர வேண்டும். தயவு செய்து தா! என்கிறார் பகத்சிங்.

ரொட்டி வருகிறது. ஆடிப் பாடிக்கொண்டே பகத்சிங் அந்த ரொட்டியைச் சாப்பிடுகிறார்.

பகவத்சிங் தனது கடைசி மூச்சுவரை தேசத்தை நேசித்தது போலவே மானுடத்தை நேசித்தார். மனிதருள் ஏற்றத்தாழ்வுகளை வெறுத்தார்.

**-திலீபன்**

ஆதாரம்: பாய்மகாவீர் எழுதிய இந்தியன் எக்ஸ்பிரஸ் கட்டுரை

நன்றி : தீக்கதிர்

## வாக்குறுதி வரும் முன்னே வாக்கெடுப்பு வரும் பின்னே

*பாட்டாளிகளே*
*நிமிர்ந்து நில்லுங்கள்!*
*அரசியல் வாதிகள் வருகிறார்கள்.*

*வர்ணக்கொடிகள்*
*வனப்புடன் அசைகின்றன*
*வாகனங்கள் வகைவகையாய் வருகின்றன.*

*ஆண்டாண்டு காலமாய்*
*அசைக்க முடியாத வாக்குறுதிகளை,*
*இதோ! நிறைவேற்றுகிறோம் என்கின்றார்கள்.*

*கொழுந்து கிள்ளும் கைகள்,*
*இந்த நாட்டின் செல்வங்கள்*
*என்றெல்லாம் புகழ்கிறார்கள்.*

*அன்பர்கள் சந்தாப் பணத்தையும்,*
*அதிகரித்துக் கொண்டார்கள்*
*சம்பளத்தை அதிகரித்துதந்துள்ளோம் என்று.*

*பச்சை சேவல் கூவுகிறது*
*வாக்கு எமக்கு போடுங்கள்,*
*முட்டை போடுகிறோம் என்று.*

*கறுப்பு கணைக்கொண்ட*
*சிவப்பு மண்வெட்டி தொழிலாளிக்காக*
*வெட்டுகிறது ஆறடிக்குழியை.....*

*தொழிலாளிகளே!*
*ஓடொடி வாருங்கள்.*
*உங்களை உயிருடன் புதைக்கிறோம் என்று.*

*காலம் காலமாய் கண்களில்*
*கண்ணீர் மழைசொரிந்து*
*கவனிப்பாரற்று வாழ்கின்றார்கள்.*
*மலையக பாட்டாளிகள்.*

*பாட்டாளிகளே! போலி வாக்குறுதிகளை*
*மறந்துவிட்டு, உங்கள் உழைப்பிற்கு*
*உறுதுணை நிற்கும்..........*

*செங்குருதியை மறவாது,*
*சிந்தியுங்கள்..............ஏனென்றால்*
*அரசியல் வா(ந்)திகள் வருகிறார்கள்.*

*அ(ை)ரசியல்வாதிகள் வருகிறார்கள்.*
*தொழிற்சங்கவாதிகள் வருகிறார்கள்- பின்னே*
*தேர்தல் வருகிறது......*

**வீரபுத்திரன் சசிகுமார்.**
சென்மாகிறட் தோட்டம், உடப்புசல்லாவ.

# நாலு நடக்கும் உலகிலே

## இப்படியும் ஒரு பாராட்டு

மனித உரிமையாளர் சாள்ஸ் அபேசேகரவின் மரணத்தை அடுத்து அவர் சம்பந்தப்பட்ட மேர்ஜ் நிறுவனத்தின் ஆதரவுடைய தமிழ் ஏட்டில் இரண்டு இரங்கல் செய்திகள் வந்தன. அவற்றில் ஒன்று ஒரு தமிழறிஞருடையது. அவர் சாள்ஸை மிகவும் புகழ்ந்து எழுதி, அவரை ஒரு பீஷ்மர் என்றும் முடிவு கட்டி விட்டார்.

மகாபாரதத்தில் பீஷ்மர் ஒரு மாவீரர், நல்லவர், ஞானி, ஆயினும் அறிந்து கொண்டே தீயவர் தரப்பிற் போரிடும் அவலம் அவருக்கு நேர்ந்தது. சாள்ஸ் மீது நமது அறிஞருக்கு என்ன கோபம்? இப்படியும் நியாயமில்லாது காலை வாரி விடலாமா? நல்ல வேளை சாள்ஸ் மட்டும் தமிழராகப் பிறந்திருந்தால் நம்மவர் அவரை விபீடணன் என்றோ சுக்ரீவன் என்றோ "புகழ்ந்திருப்பார்".

## திருகோணமலைப் பாதாள மன்ற உறுப்பினர்

சென்ற வருடம் திரு. தங்கத்துரை அவர்களது கொலையையடுத்துத் தனது நீண்டகாலக் கனவை நிறைவேற்றிய திரு. சம்பந்தன் புதிய பா.உ. வாகப் பதவி ஏற்குமுன் மூன்று மாதங்களில் இனப்பிரச்சனையை அரசாங்கம் தீர்க்காவிட்டால் பதவி விலகுவேன் என்று சூழுரைத்துப் போனார். என்றோ மூன்று மாதங்களாகி விட்டன. மூன்று வருடங்களானாலும் தானாக அவர் விலகமாட்டார் என்பது உறுதி. அது கிடக்கட்டும். எந்தப் பா.உ. தான் சொன்னபடி நடக்கிறார்! ஊருக்கு உபயோகமாகவாவது இருக்கிறாரா?

ஊரில் மக்களுக்கு நேரும் இன்னல்கட்காகக் குரல் கொடுக்கும் அக்கறை கூட இந்தப் பா.உ. வுக்கு இல்லையே என்பதுதான் தமிழ் மக்களது கவலை. அண்மைய தம்பலகாமம் படுகொலைகள் பற்றி ஊரில் எவரெவரோ எல்லாம் ஓடி அலைய இவர் மட்டும் அலட்டிக் கொள்ளாமல் இருக்கிறார். இவர் பாராளுமன்ற உறுப்பினரா அல்லது மக்களுக்கு எட்டாத மறைவிலுள்ள பாதாளமன்ற உறுப்பினரா என்பதே மக்கள் மனதில் எழும் கேள்வி.

## செங்கொடிச் சங்கமும், சரணாகதியும்

மலையக மக்களைப் பொறுத்தவரை செங்கொடிச் சங்கத்திற்கு ஒரு உன்னதமான போராட்ட வரலாறு இருந்தது. மலையக மக்களின் அரசியல் விழிப்புணர்வுக்கு ஒரு பெரும் பங்காற்றிய அளவில் மற்றத் தொழிற்சங்கம் அனைத்தையும் விட சிறப்பான முறையில் வேறுபட்டிருந்தது. 1974 வரை தோழர் சண்முகதாசனால் வழிகாட்டப்பட்ட இச்சங்கம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடதுசாரிகள்) பிளவுபட்ட போது பிரிந்து சென்றவர்களுடன் சேர்ந்து சென்றது. எனினும் 1977 தேர்தல் வரை பழைய கொள்கைக்குச் சிறிது விசுவாசமாக இருந்த இந்தச் சங்கம், பின்பு சங்கத் தலைவர்கள் சிலரது சுயலாபத்திற்குப் பலியாகி மெல்ல மெல்ல மற்றத் தொழிற்சங்கங்கள் போலாயிற்று. சங்கத்தின் வளர்ச்சி குன்றியது. வேறு வழியில்லாமல் 1980களின் பின்பகுதிகளில் அவர்களை எல்லாம் திரிபுவாதிகள் வலது சந்தர்ப்பவாதிகள் என்றும் செங்கொடிச் சங்கம் நியாயமான முறையில் கண்டித்ததோ அவர்களிடம் செங்கொடிச் சங்கம் போய்ச் சேர்ந்தது. 1977க்குப் பிறகு அரசியல் அனாதையான வலதுசாரி கம்யூனிஸ்ட்டுகள் 1984ல் கொர்ப்பச்செவ் வந்தபிறகு மேலும் அநாதரவாகி 1990ல் அவரும் போய் சோவியத் யூனியனும் போனபிறகு திசை கெட்டுச் சீரழிந்தனர். அதே பாதையில் செங்கொடிச்சங்கமும் பயணமாகியதை நிரூபிக்கும் முறையில் மே மாதம் அவர்கள் எந்தத் தொண்டமானைத் துரோகி என்று ஏசினார்களோ அவருடன் தேர்தல் கூட்டு வைப்பார்களென்று அறிவிக்கப்பட்டது. பலரும் ஏளனம் செய்த பின்பு இது பற்றி மறுப்பு விடுக்கப்பட்டாலும் உண்மையில் செங்கொடிச்சங்கம் எசமானத்துவத்தில் சங்கமமாவதற்குப் பூரண ஆயத்தமாகி விட்டது என்பது உண்மை. வர்க்க எதிரிகளை விட மோசமானவர்கள் வர்க்கத் துரோகிகள். அவர்கள் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் வீசப்படுவதில்லை. அவர்கள் அங்கேயே நிரந்தரமாக வாழுகிற எலிகளும், கரப்பான் பூச்சிகளும் போன்றவர்கள்.

## இந்து ஆதிக்க வாதிகளும் தமிழ் ஏடுகளும்

இந்திய அணுகுண்டுப் பரிசோதனையையும் ஆயுதப் பெருக்கக் கொள்கையையும் நியாயப்படுத்தும் முயற்சியில் இந்திய ஆளும் வர்க்க ஏடுகள் மும்முரமாக இருக்கின்றன. சீன மிரட்டல் பற்றிய தங்களது ஆதாரமற்ற பேச்சை இந்திய ஆட்சியாளர்கள் மெல்லக் கைவிட முயலுகிற இவ்வேளையில் இந்திய முதலாளியத்தின் ஏடான தினமணி சீனாவை நெருப்புக் கக்கும் பயங்கர மிருகமாக சித்தரித்து கருத்துப்படம் போட்டது. அதையே ஈழத்தின் பிரபல நாளேடு ஒன்று மறுபிரசுரம் செய்துள்ளது. இதன் தேவை என்ன? தமிழ் மக்களைப் பொய் சொல்லி ஏமாற்றும் தேசியவாத அரசியல் மரபுக்கும் இந்த வெட்கக்கேடான பத்திரிகை மரபுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

## அணுஆயுத மிரட்டல்

கியூபாவுக்கும், வியற்நாமுக்கும், சீனாவுக்கும் எதிராக அமெரிக்கா –அணுஆயுத மிரட்டலில் இறங்கிய கதை பழையது. அணுஆயுதங்களைப் போரிற் பயன்படுத்திய முதல்நாடு என்ற பெருமை அதற்கு என்றைக்கும் உண்டு. அதைச் செய்த ஒரே நாடு என்ற பெருமையும் அதனுடையது. ரஷ்யா சீனாவை மிரட்டிய காலமும் இருந்தது. பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் எதுவுமே இன்னொரு நாட்டிற்கெதிரான போரில் முதலில் அணுஆயுதப் பிரயோகம் செய்யும் நாடாகத் தாம் இருக்க மாட்டோமென்று உறுதிகூற மறுத்து வந்துள்ளன. சீனா மட்டுமே இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளது. அதன் நிலைப்பாடு இன்றுவரை மாறவில்லை.

இந்தியாவை ஒரு அணுஆயுத வல்லரசாக அங்கீகரிக்கும்படி விரும்பும் இந்திய அதிகாரத்துவம் தேவையானால் அணுஆயுதங்களைப் பாவிப்போம் என்று மிரட்டியுள்ளது. காஷ்மீர் முதல்வர் பாருக் அப்துல்லாவின் இந்தப் பிரகடனம் யாருக்கு எதிரானது? இதை இந்திய அரசாங்கம் ஏன் கண்டிக்கவில்லை? இந்தியாவின் அணுகுண்டுப் பரிசோதனை தென்னாசியாவின் அரசியல் அமைதியை மேலும் சீர்குலைக்கும் என்ற எச்சரிக்கை எதிர்பார்த்ததைவிட வேகமாக மெய்யாகி வருகிறது. இதற்கு பா.ஜ.க. ஆட்சி தனது பங்கை வழங்குவதிற் தவறில்லை.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI

S-47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11, இலங்கை. தொ.பேசி. 435117, 335844


## புதிய அரசியல் திசை மார்க்கம்

நாடு மிக விரைவாக அதள பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஆளும் வர்க்கமும் அதன் சார்பான அரசியல் கட்சிகளும் தத்தமது வர்க்க நலன்களைப் பாதுகாப்பதற்தாக ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி வருகின்றன. அதனால் தொழிலாளர்கள், விவசாயிகள், தேசிய இனங்கள், இளைஞர்கள், பெண்கள், அறிவு ஜீவிகள் ஆகிய அனைத்துப் பிரிவினரும் அடக்கி ஒடுக்கப்படுகின்றனர்.

வடக்கு கிழக்கிலே யுத்தமும் இரத்த ஆறும் ஓடிக்கொண்டிருக்கிறது. வடக்கு கிழக்கு மக்கள் மட்டுமன்றி தமிழ் மக்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ நாடு முழுவதுமாக அவர்கள் இரண்டாம் தரமாக நடாத்தப்பட்டு யுத்தத்தின் பெயரால் பாதுகாப்பின் பெயரால் அடக்கப்படுகின்றனர். இந்த யுத்தத்தின் எதிர் விளைவுகள் சிங்கள மக்களைப் பல்வேறு அழிவுகளில் புற்றுநோய் பரவுவது போன்று பரவிப் பாதித்து வருகின்றது.

பொருளாதாரம் முற்றிலும் தாராள மயத்தினால் நலிவடைந்து கொண்டு செல்கின்றது. அந்நியக் கொம்பெனிகளும் உள்நாட்டு பண முதலைகளும் நாளாந்தம் உறிஞ்சிக் கொழுத்து வருகின்றனர். இதற்கு வழி காட்டுகிறது உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம். அதனை இருகரம் நீட்டி வரவேற்று செயல்படுத்தி வருகிறது. சந்திரிகா அரசாங்கம். வாழ்க்கைச் செலவு வளர்ந்து கொண்டே செல்கிறது. தொழிலாளர்கள், ஊழியர்கள் அரசாங்கத் துறைகளில் அடிக்கடி வேலைநிறுத்தம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். பெருந்தோட்டத் தொழில் துறையில் கொம்பனி ஆதிக்கம் உச்சத்தில் உள்ளது. 105 ரூபா சம்பள உயர்வு மறுக்கப்பட்டது அதற்கு தகுந்த உதாரணம். வேலை இன்மை, இளைஞர் விரக்தி, மாணவர்கள் அதிருப்தி என யாவும் நெருக்கடிகளை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றன. கட்டாய ராணுவ சேவை வருமோ என்ற அச்சம் சிங்கள இளைஞர்களிடையே நிலவுகிறது.

இத்தனைக்கும் மத்தியில் அரசாங்க உயர் மட்டத்தில் உள்ளவர்கள், அரச யந்திரத்தின் உயர் பதவியில் நிற்பவர்கள் தத்தமக்கு வேண்டிய யாவற்றையும் பெற்று வருகிறார்கள். பணத்தின் மேல் பணமாகவும், சொத்து சுக விரிவாக்கமாகவும் தம்மை செழுமைப்படுத்தி வருகிறார்கள். இந்த விடயத்தில் சிங்கள, தமிழ், முஸ்லீம் பேதம் கிடையாது. ஒருவருக்கு ஒருவர் உதவி ஒத்தாசையாக இருந்து தமது உயர் வர்க்க நலன் பேணி வருகிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் மேற்கூறிய அடிப்படை வர்க்க நிலைப்பாட்டில் ஒரே தளத்தில் நின்றுவரும் வர்க்க சக்திகளது அரசியல் பிரதிநிதிகளே. இவர்கள் எவர் ஆட்சி செய்தாலும் மக்கள் என்ற தாளத்தில் உழன்று கொண்டிருக்கும் உழைக்கும் வர்க்கத்திற்கு விமோசனம் தேடித்தரப்போவதில்லை.

இவ்விடத்திலேதான் பன்முக அவலங்களை எதிர்நோக்கி நிற்கும் தொழிலாளர்கள் விவசாயிகள், அடக்கப்படும் தேசிய இனங்கள், பெண்கள், இளைஞர்கள், அறிவு ஜீவிகள் என்போருக்கு புதிய அரசியல் திசை மார்க்கம் தேவைப்படுகிறது. இந்த நூற்றாண்டு முடிவதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் மட்டுமே எஞ்சி நிற்கும் இவ்வேளை கடந்த காலத்தின் கசப்பான அரசியல் வரலாற்று அனுபவம் மக்களை விரக்தியுறச் செய்துள்ளது. ஆதலாலேயே புதிய அரசியல் திசை மார்க்கம் மக்களுக்கு தேவைப்படுகிறது. மூன்றாவது சக்திமிக்க அணி காலத்தின் தேவையாகிறது. அதனை நிறைவு செய்வது நேர்மையான இடதுசாரி சக்திகளது வரலாற்றுக் கடமை. அதன் முக்கியத்துவம் உணர்ந்தே புதிய 'இடதுசாரி முன்னணி' கொள்கை வேலைத்திட்ட அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதனைச் சக்திப்படுத்தி முன்னெடுப்பது சகல முற்போக்கு ஜனநாயக புரட்சிகர சக்திகளினதும், மக்களினதும் அடிப்படையான கடமையாகும்.

15.07.98

---ஆசிரியர் குழு

# தேர்தலில் பங்கெடுப்பது வேறு தேர்தலை சமூக மாற்றத்துக்கான பாதையாக நம்பிவிடுவது வேறு

பாட்டாளி வர்க்கத்தின் பின்தங்கிய பிரிவினருக்கு அறிவூட்டுவதற்காகவும் அறியாத, பின்தங்கிய, அபிவிருத்தியடையாத கீழ்தட்டு கிராம மக்களை தட்டியெழுப்பவும் முன்னுக்கு கொண்டு வருவதற்காக கம்யூனிஸ்ட் கட்சியானது பாராளுமன்ற தேர்தல்களில் பங்கெடுக்கவும், பாராளுமன்ற ரீதியான போராட்டங்களை முன்னெடுக்கவும் கடப்பாடுடையதாகும். பாராளுமன்றத்தையும், ஏனைய பிற்போக்கு நிறுவனங்களையும் மாற்றீடு செய்யக்கூடிய வல்லமை குறைவாக இருக்கின்ற போது பாராளுமன்றத்தினுள்ளும், ஏனைய நிறுவனங்களுக்குள்ளும் இருந்து வேலை செய்ய வேண்டியது அவசியமாகும். ஏனெனில் அந்நிறுவனங்களுக்குள்ளேதான் மதகுருவானவர்களாலும். ஏமாற்றப்பட்ட நிலையிலும், மிகவும் கீழ்நிலையிலுமான கிராமிய வாழ்க்கை நிலையும் கொண்ட தொழிலாளர்களை காணமுடிகிறது.

இவ்வாறு தோழர் லெனின் இடதுசாரி கம்யூனிஸம் ஒரு இளம் பருவக் கோளாறு என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்ற தேர்தல்களில் ஈடுபடுகின்ற இடதுசாரிகள் அல்லது கம்யூனிஸ்ட்டுகள் எல்லோருமே மேற்படி மேற்கோளை காட்டுவது வழக்கம்.

ஆனால் முதலாளித்துவ அதிகாரத்தை கைப்பற்றுவதினாலன்றி அதன் அரச யந்திரத்தை உடைத்து முதலாளித்துவ சர்வாதிகாரத்துக்கு பதிலாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்தினாலன்றி சோஷலிஸத்தை நிர்மாணிக்க முடியாது என்று லெனின் கூறியதை பாராளுமன்றப் பாதையில் மூழ்க நினைப்பவர்களோ மூழ்கியவர்களோ நினைவு படுத்திக் கொள்வதுகூட இல்லை.

முதலாளித்துவ அரச யந்திரத்தை உடைக்காமலே புரட்சியை முன்னெடுக்கலாம் என்றும் அதனை பாராளுமன்ற அதிகாரத்தால் உடைக்கலாம் என்றும் கூறிக் கொள்ளும் கம்யூனிஸ்ட்டுகள் எனப் படுபவர்களும் இன்னும் இருக்கிறார்கள். இந்த கருத்தை நேர்மையாக நம்பி சிலியில் புரட்சியை முன்னெடுத்த தோழர் அலெண்டேவிற்கு ஏற்பட்ட நிலையும் அப்புரட்சிக்கு ஏற்பட்ட தோல்வியும் கம்யூனிஸ்டுகளுக்கு சிறந்த பாடமாகும். நேபாளத்தில் ஐக்கியப்பட்ட மாக்சிஸ்ட்டு லெனினிஸ்டுகள் பாராளுமன்ற அதிகாரத்தை கைப்பற்றிய பின்னரும் அங்கு ஏற்பட்ட பின்னடைவான நிலைமைகளும் எமக்கு சிறந்த உதாரணமாகும்.

முதலாளித்துவ பாராளுமன்றங்களும் நிறுவனங்களும் தங்களுக்கு அந்நியமானவை என்பதனையும் தொழிலாளர்களை அடக்குவதற்காக முதலாளிகள் பாவிக்கும் இயந்திரம் என்பதனையும், உயர்வாக்கம் தொழிலாளர்களை அடக்குவதற்கு பாவிக்கப்படும் நிறுவனங்களாகும். என்பதனையும் தொழிலாளர்கள் அறிவார்கள் என்றும் லெனின் கூறியுள்ளார்.

அடக்கு முறைகளை செய்கின்ற வர்க்கத்தின் சுபாவத்தை மறைக்கும் திரை தான் பாராளுமன்றம் என்றும் குறிப்பிட்டுள்ளார். மாக்சிஸ்ட்டுகள் என்போர் பாராளுமன்றத்தின் முதலாளித்துவ வர்க்க குணாம்சத்தை குறைத்து காட்டுபவர்களாக மாறி வருகின்றனர்.

அதன் மூலம் தொழிலாளர் வர்க்கத்திற்கு துரோகம் இழைப்பவர்களாக மாறிவிடுகின்றனர் என்று தோழர் ல்ரோடோ மாட்டின்ஸ் (பெல்ஜிய தொழிலாளர் கட்சியின் தலைவர்) குறிப்பிட்டுள்ளார்.

உண்மையான கம்யூனிஸ்ட்டுகள் பாராளுமன்ற தேர்தலில் பங்கெடுப்பது அது பற்றிய மாயை தோற்றுவிப்பதற்கோ பாராளுமன்றத்தினூடாக சமூக மாற்றத்தை செய்யலாம் என்ற நம்பிக்கையை ஊட்டுவதற்கோ அல்ல. மாறாக பாராளுமன்றம் என்பது ஒரு நாளைக்கு கலைக்கப்பட வேண்டியதொன்று என்றும் அது; முதலாளித்துவ சர்வாதிகாரத்தை நடத்தும் நிறுவனம் என்றும் உழைக்கும் மக்களின் புரட்சிகர அமைப்புகளினூடாக அதனை மாற்றியமைக்க வேண்டும் என்றும் தொழிலாளர்களுக்கு உணர்த்துவதற்காகவே கம்யூனிஸ்ட்டுகள் பாராளுமன்ற தேர்தல்களில் போட்டியிடுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வரலாற்றில் பாராளுமன்ற தேர்தலை முற்றாக ஏற்றுக் கொண்டதால் இடதுசாரிகளில் ஒரு பகுதியினர் சீரழிந்துள்ளனர். பாராளுமன்ற தேர்தலை பகிஷ்கரித்தவர்களும் இன்றும் மக்கள் மத்தியில் இல்லை. தொழிலாளர்களை அறிவூட்டப்படாத நிலையில் இருப்பதாகக் கூறிக்கொண்டு பாராளுமன்றப் பாதையையே நம்பி விடுவதும் தொழிலாளர்கள் பூரணமாக அறிவூட்டப் பட்டுள்ளதாக எண்ணிக் கொண்டு பாராளுமன்ற பகிஷ் கரிப்பையே முன்னெடுப்பதும் எவ்வளவு பாதிப்பானவை என்பதை அறிந்து கொண்டுள்ளோம்.

எனவே பாராளுமன்றம் தேர்தல்கள் போன்றவற்றின் முதலாளித்துவ வர்க்கத்தன்மை பற்றிய் தெளிவின்றி தொழிலாள வர்க்கத்தின் சார்பாக நிற்கும் இடதுசாரிகள் அவற்றில் பங்கெடுத்தால் தொழிலாளர் வர்க்கத்திற்கு தோல்வியே மிஞ்சும்.

### பழிவாங்காத.........

5ம் பக்கத் தொடர்ச்சி

அவர்கள் படித்த பாடசாலையில் அவ்வகுப்பை நடத்த மத்தியமாகாண கல்வி அமைச்சு அங்கீகாரம் வழங்கவில்லை. ஆனால் இரண்டு வருடங்களாக வகுப்புகள் நடத்தப்படும் போது அங்கீகாரம் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்ட போதும் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றும் வரை அங்கீகரிக்கப்படவில்லை. அம்மாணவர்கள் இரண்டு வருடங்கள் படித்தும் வகுப்பிற்கு அங்கீகாரம் கிடைக்காததால் பரீட்சை எழுதமுடியாது போய்விட்டது. தற்போது அம்மாணவர்கள் க.பொ.த உயர்தரத்தில் கலைத்துறையில் படிக்கின்றனர். இவ்வாறு க.பொ.த. உயர்தரம் கணித வகுப்பை நடத்த அனுமதி கிடைக்காத பாடசாலை இராகலை தமிழ் மகா வித்தியாலயமாகும்.

இவ்வாறு பலசாதனைகள் மத்திய மாகாண கல்வி அமைச்/சால் புரியப்பட்டுள்ளது. அந்த அமைச்சுக்கு பொறுப்பாக இருந்தவர்தான் புத்திரசிகாமணி. அவரின் அவ்வகையான சேவைகளையும் கணக்கில் எடுத்து அடுத்த முறையும் அவரை தேர்ந்தெடுப்பது நுவரெலியா மாவட்ட வாக்காளர்களின் பொறுப்பாகும்.

## பூப்பனையில் ஹோட்டல்! தொழிலாளர்கள் வெளியேற்றம்!

கந்தப்பொளை பூப்பனை தோட்டத் தொழிலாளர்கள் அவர்களின் லயங்களிலிருந்து வெளியேற்றப்பட இருக்கிறார்கள்.

அத்தோட்டத்தில் நடத்தப்படுகிற உல்லாசப் பிரயாணிகளுக்கான ஹோட்டலுக்கு அருகில் தோட்டத் தொழிலாளர்கள் வாழக் கூடாதாம். அதன் அருகில் (அசுத்தமான) தொழிலாளர்களின் லயங்கள் இருக்கக் கூடாதாம். அதுமட்டுமல்ல உல்லாசப் பிரயாணிகளுக்கு விருப்பமான ஒழுக்கமற்ற தொழில்களில் பெண் களையும், சிறுவர்–சிறுமியர்களை ஈடுபடுத்தும் சதிவேலைகளும் தொடங்கப்பட்டு விட்டதாம்.

உல்லாசப் பிரயாணிகளுக்கு வசதியான இடத்தில் ஹோட்டல் அமைவதினால் நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வந்த தொழிலாளர்களின் லயங்கள் அழிக்கப்படவிருக்கின்றன. அவர்களை திருப்திப்படுத்த தீய தொழில்களில் மலையகத்தவர்களையும் ஈடுபடுத்தவும் விரும்புகின்றனர்.

இருந்தும் இப்படியான பாதிப்பகளை ஏற்படுத்தும் உல்லாசப் பிரயாண ஹோட்டல்களை ஏற்படுத்த வேண்டும் என்று சிலர் முன்நிறகின்றனர். அவர்கள் யார்? தொழிலாளர்கள் அல்ல சில மலையக பாராளுமன்ற அரசியல் வாதிகள் சில தொழிற்சங்கவாதிகள்.

ஏன் தெரியுமா? வெளிநாட்டு கம்பெனிகளின் கொமிஷன்களுக்கு ஆசை இருக்காமல் இருக்குமா? மலையக இளம் சமூகம் உல்லாசப் பிரயாணத் தொழிலினால் பாதிக்கப்படுவதை அவர்கள் விரும்பாதவர்களா?

நன்றி - நூலகத்திட்டம்



# இந்தோனீசியா

## இரணியன் போல் அரசாண்ட சுகார்த்தோ

ரஷ்யாவை ஆண்ட கொடுங்கோலன் ஸார் நிக்கொலஸ் பற்றிய நினைவுகள் மழுங்கி விட்டன. இன்று ஸாரின் படிமத்தைப் பூசி மெழுகி அலங்கரிக்கும் செயல்கள் நடைபெறுகின்றன. அவை நீண்ட காலத்தில் வெற்றி அளிக்கப் போவதில்லை. ஆயினும் அரசியலில் மறதி போன்று வழமையானது ஒன்றும் இல்லை, ஆபத்தானதும் ஒன்றுமில்லை. எனவே தான் வரலாறு மக்களுக்கும் அவர்களை இம்சிக்கும் எசமானர்கட்கும் திரும்பத் திரும்ப ஒரே பாடத்தைப் பல்வேறு காலங்களிலும் இடங்களிலும் நடத்தி வந்துள்ளது.


அழிய முடியாதன போலத் தோன்றிய வலிய சர்வாதிகாரிகள் மக்களால் விழுத்தப்பட்டுள்ளனர். நாஸி ஜேர்மனியின் ஹிற்லர், சிலியின் பினேக்ஷே, ஈரானின் ஷா றெஸா பஹ்லவி,* பிலிப்பென்ஸின் மாக்கொஸ் போன்றோர் விழுவார்கள் என்று அவர்களது இறுதி நாட்கள் வரை எவருமே நம்பியிருக்கவில்லை. அவர்களது கொலைகளையும் கொடுமைகளையும் பார்த்துக் கண்டிக்காமலும் மனதுள் திருப்திப்பட்டு நியாயங்கற்பித்தவர்களும் அவர்கள் விழுந்த பின்பு அவர்களது தவறுகளையும் விழுந்ததற்கான காரணங்களையும் தெளிவாக விளக்கி நீண்ட அறிக்கைகள் விடுவார்கள்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு கொலனி ஆதிக்கம் பெற்ற சரிவு நிரந்தரமானது. ஆயினும் முன்னாட் கொலனிகளில் ஆட்சிக்கு வந்தோர் பெருமளவும் உள்ளூர் எசமான வகுப்பினராகவே இருந்தனர். எனவே இவர்களை மடக்கிப் போடுவதில் கொலனி ஆதிக்கவாதிகட்கு எந்தவிதமான பெரிய இடையூறும் இருக்கவில்லை. நாடுகளிடையில் பகைமையையும் மக்களுக்கிடையில் இனப் பகைமையையும் மதப் பூசல்களையும் விதைப்பதில் முன்னாள் எசமானர்கள் திறமையை உள்வாங்கிக் கொண்ட அமெரிக்க எசமான் இன்று மூன்றாமுலகைக் கூறுபோட்டுச் சூறையாடும் முக்கிய சர்வதேசக் கொள்ளைக்காரனாக இருக்கிறது. சோவியத் யூனியனின் சீரழிவு, ஸ்தாலினின் மரணத்தின் பின்பு, எதிர்பார்க்கக் கூடிய விதமாகவே துரிதமடைந்தது. அதை இயலுமாக்கிய க்ருஷ்சொவ்

மக்களுக்கிடையில் இனப் பகைமையையும் மதப் பூசல்களையும் விதைப்பதில் முன்னாள் எசமானர்கள் திறமையை உள்வாங்கிக் கொண்ட அமெரிக்க எசமான் இன்று மூன்றாமுலகைக் கூறுபோட்டுச் சூறையாடும் முக்கிய சர்வதேசக் கொள்ளைக்காரனாக இருக்கிறது.

விரைவில் பதவி இழந்தாலும் அந்த அழிவுப் பாதை தொடர்ந்தது. இதன் விளைவாக மூன்றாம் உலக நாடுகளது சுயாதிபத்தியத்துக்கான போராட்டம் நலிவு கண்டது. இந்த சூழலில்தான் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பூரண ஆசியுடனும் உத்தரவாதத்துடனும் இந்தோனீஸியாவில் சுகர்ணோவுடைய ஆட்சி கவிழ்க்கப்பட்டு சுஹார்த்தோ என்ற ராணுவ சர்வாதிகாரியின் ஆட்சி நிறுவப்பட்டது.

சீனாவுக்கு வெளியே மிகவும் அதிகளவில் உறுப்பினர்களைக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சி இந்தோனீசியாவில் இருந்தது. டச்சுக் கொலனித்துவத்திற்கும் ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கும் எதிரான போராட்டத்தில் தனது சிறந்த பங்களிப்பின் மூலமாக ஒரு வலிய மக்கள் சக்தியாக வளரத் தொடங்கிய இந்தோனீஸியக் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் யூனியனின் தவறான பாதையைக் கண்டிப்பதிலும் உறுதியாக நின்றது. ஆயினும் அந்தச் சித்தாந்தத் தெளிவை நடைமுறை அரசியலாக்குவதில் அந்தக் கட்சி செய்த தவறுகளின் விலை பெரிது. அவற்றின் விளைவாக அந்தக் கட்சி ஏறத்தாழப் பூரணமாகவே கொன்றொழிக்கப்பட்டது. அத்தவறுகட்கான முக்கிய காரணம் மக்கள் மத்தியில் தமது வெகுசனப் போராட்டச் சக்திகளைக் கட்டியெழுப்பி மக்களைத் தற்காப்பான அரசியற்



போராட்ட நடைமுறைகளிற் பழக்கப்படுத்தி ஒரு வலிய புரட்சிகர வெகுசன இயக்கத்திற்குத் தன்னை ஆயத்தப்படுத்த அக்கட்சி தவறியது. மாறாக இந்தோனீசியத் தேசியவாதியும் ஏகாதிபத்திய விரோதியும் முற்போக்கு வாதியுமான சுகர்ணோவின் ஆதரவை அவர்கள் மிகவும் சார்ந்து நின்றனர். ஆயுதப்படைகளுக்குள் தமக்கு ஆதரவாக இருந்த சக்திகள் மீதும் மிகையான நம்பிக்கை கொண்டு இருந்தனர். இது அவர்கள் மத்தியிற் கவனயீனமானதும் அசட்டையானதுமான ஒரு அரசியற் போக்கிற்குக் காரணமாகிற்று. இதைப் பயன்படுத்தியே ஒரு இராணுவச் சதி திட்டமிடப்பட்டது. இச் சதிக்குப் பின்னால் கம்யூனிச விரோதமும், சீன விரோதமும் அணிசேரா நாடுகளைப் பலவீனப்படுத்தும் நோக்கமும் இருந்தன.

அணிசேரா நாடுகளின் மத்தியில் ஏகாதிபத்திய எதிர்ப்பை வலியுறுத்திய நாடுகளில் இந்தோனீசியாவின் பங்கு முக்கியமானது. எனவே இந்தோனீசியா அரசைக் கவிழ்த்து அமெரிக்க சார்பு ஆட்சியொன்றை நிறுவுவதன் மூலம் ஆசியாவில் தனது நிலைப்பை வலுப்படுத்த அமெரிக்கா முற்பட்டது. வியற்நாம் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு யுத்தம் நெருக்கடியை எதிர்நோக்கிய காலகட்டமான 1960களில் ஆசியாவில் அணிசேரா நாடுகளிடையே வியற்நாமிலிருந்து அமெரிக்கா வெளியேற வேண்டும் என்ற எண்ணம் வலுப்படையும் சாடையும் அமெரிக்காவை கவலைக்குள்ளாக்கியது. சீனாவைத் தனிமைப்படுத்தும் முயற்சியின் தோல்வியும் அமெரிக்காவை வாட்டியது. எனவே பல வகைகளிலும் இந்தோனீஸியாவில் ஒரு வலதுசாரிச் சதிப்புரட்சி அவசியமாயிற்று. நாட்டில் எந்தப் பெரிய அரசியல் – பொருளாதார நெருக்கடியும் இல்லாத நிலைமையில் இச்சதிப்புரட்சி நிறைவேற்றப்பட்டது. சுகார்ணோவுக்கு எதிராக ஆயுதப் படைகளில் ஒரு பகுதியினர் சதி செய்கின்றனர் எனவும் அவரைக் காப்பாற்றுவதற்கெனவும், திட்டமிட்ட முறையில் இடதுசாரி அனுதாபமுள்ள சில விமானப்படை அதிகாரிகளைக் கொன்று சுகர்ணோவைத் தமது பாதுகாப்பில் உள்ள கைதி போலாக்கினர். அடுத்த நடவடிக்கையாக கம்யூனிஸ்டுகட்கு எதிரான வேட்டையை முடுக்கி விட்டனர். அன்று சீன வம்சாவழியினர் நடுவே கம்யூனிஸ்டுகட்குக் கணிசமான செல்வாக்கு இருந்தது. சீனர்கட்கெதிரான ஒரு பகை உணர்வும் தூண்டிவிடப்பட்டது. எல்லாமாக ஐந்து லட்சம் பேராவது கொல்லப்பட்டனர் என்று மேலைநாட்டு செய்திநிறுவனங்கள் கூறின. சில மதிப்பீடுகள் தொகையை ஏழு லட்சத்துக்கும் மேலாக கூறுகின்றன. விரைவில் சுகர்ணோ பதவி நீக்கப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். சுஹார்த்தோ என்ற ராணுவ அதிகாரி ஆட்சியைத் தன்கைக்குள் கொண்டு வந்தான்.

இந்தோனேசியாவின் இயற்கை வளங்கள் பெரியன. இந்தோனீஸியாவின் சர்வாதிகார ஆட்சி நாட்டை ஒரு பொருளாதார நெருக்கடிக்குட் கொண்டு செல்வதற்கான சூழ்நிலை ஏற்படமுன் 70 களின் நடுப்பகுதியில் நாட்டில் எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டது. இது இந்தோனீசியாவின் தேசிய வருமானத்தை மிகவும் பெருக்க உதவியது. ஆயினும் நாட்டின் இந்த வளமும், நாட்டின் வன வளமும், கனிட்பொருள் வளமும் வேகமாகச் சூறையாடப்பட்டன. பன்னாட்டு நிறுவனங்களும், அமெரிக்காவும், ஜப்பானும் நாட்டின் மூலவளங்களைப் பகிர்ந்து கொண்டிருந்த போது அவ்வளங்கட்குரிய விலையாக இந்தோனீஸியாவிற்கு வழங்கப்பட்ட தொகையை இந்தோனீசியாவின் சர்வாதிகாரியான சுஹார்த்தோவும் அவனது கூட்டாளிகளும் தங்களுடையதாக்கிக் கொண்டனர். எனினும் 1996க்குப் பின்பு தென்கிழக்கு ஆசியப் பொருளாதாரங்கள் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானபோது கொரியா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் சேர்ந்து இந்தோனீசியாவும் பெரும் நெருக்கடிக்குள்ளானது. அதன் விளைவாக விலைவாசிகள் பெருகத் தொடங்கின. அதேவேளை இந்தோனீஸியாவின் பொருளாதாரத்தை நெருக்கடியினின்றும் மீட்பதற்காகக் கடனுதவி வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதி மிகவும் கடுமையான நிபந்தனைகளை விதித்தது. இந்தோனீஸிய ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை சர்வதேச நாணய நிதியிடம் உதவி பெற்று அவர்கள் சொற்படி மக்கள் மீது சுமைகளை ஏற்றினாலும் மக்களது பகைமையை நோக்க வேண்டும். அதைவிடத் தமது குடும்பங்களது கட்டுப்பாட்டிலுள்ள கம்பெனிகளில் தமது கட்டுப்பாட்டை இழக்க நேரும். மறுபுறம் நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவு காரணமாகவும் மக்களின் பகைமையைச் சம்பாதிக்க நேரிடும். இந்தோனீஸியாவில் கடந்த சில ஆண்டுகளாக வளர்ந்து வந்த அரசாங்க எதிர்ப்பு இஸ்லாமிய மதவாத அரசியலின் சக்திகளும், சுகர்ணோவின் மகளான மேகவதியின் தலைமையிலான மிதவாதிகளும் தரப்பினின்றும் வந்தது. புதிய நெருக்கடி வெகுஜனங்களின் கோபமாகக் கட்டுப்பாடின்றி வளர்ந்த நடு சக்தியாக உருவெடுத்தது. இன்னொரு புறம் சமுதாய உணர்வுமிக்க மாணவர்களும், இளைஞர்களும் சுஹார்த்தோவுக்கு எதிராகப் போராடுவதற்காக வீதிக்கு வந்தனர். இதன் பின்பு சுஹார்த்தோவின் பதவி விலகலைத் தடுக்க அவரது ராணுவ ஆதரவாளர்களாலோ அவரது அமெரிக்க எசமானர்களாலோ முடியாததாகிவிட்டது. இன்று ஏற்பட்டுள்ள தற்காலிக அதிகாரம் மக்களது கோபத்தைத் தணிப்பதற்காகச் சில ஜனநாயக நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்துள்ளது.. அதேவேளை சர்வதேச நாணய நிதியின் உதவியைப் பெறுவதிலும் ஊக்கமாக உள்ளது. எனவே இந்தோனீஸிய பொருளாதார நெருக்கடி உடனடியாகத் தீரப்போவதில்லை. அதேவேளை நாட்டில் ஜனநாயகத்திற்கும் சமூக நீதிக்கும் போராடுகிற சக்திகளைப் பிளவுபடுத்தி ஜனநாயகம் என்ற பேரில் பழைய அதிகார வர்க்கத்தின் பொருளாதார ஆதிக்கத்தையும் சுரண்டலையும் தொடரும் முயற்சி நடைபெறுகிறது. இதற்கு ஏகாதிபத்தியமும் பன்னாட்டு நிறுவனங்களும் ஒத்துழைக்காமல் இருப்பது கடினம். ஆயினும் இந்தோனீசியாவின் அரசியல் நெருக்கடி மேலும் மோசமாவது தவிர்க்க இயலாதது. 32 வருடச் சூறையாடலும் அடக்கு முறையும் பல சக்திகளை உருவாக்கிக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. நாட்டை ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாதையில் வழிநடத்தி நாட்டின் வளங்களை நாட்டு மக்களது நலன்கட்கும் சமுதாயத்தின் பொதுவான விருத்திக்குமாகக் கொண்டு செல்லக் கூடிய ஒரு அரசியற் தலைமை இன்னும் உருவாகவில்லை.

மதத் தீவிரவாதம் சீனர்கட்கு எதிரான இனவாதம், ராணுவத்தின் (ஒரு பகுதியினர்) மீது நம்பிக்கை போன்ற குழப்பமான சிந்தனையும் ஜனநாயகத்துக்கும் சமூக நீதிக்குமான சக்திகளிடமே உள்ள ஒற்றுமையீனமும் கவலைக்குரியன. இந்தோனீஸியா கிழக்கு திமோர் மீது நடத்திய ஆக்கிரமிப்பின் விளைவான விடுதலைப் போர் இன்னும் முடியவில்லை. பல நூறு தேசிய சிறுபான்மை இனப்பிரிவுகளைக் கொண்ட இந்தோனீசியாவின் இனங்களிடையிலான முரண்பாடும் ஏகாதிபத்தியத்தாலும் பிற்போக்கு வாதிகளாலும் தமக்கு வசதியாகப் பயன்படுத்தப்படும் அபாயம் உண்டு. ஆயினும் சுகார்தோவின் வீழ்ச்சி மக்கள்கையால் ஏகாதிபத்தியத்திற்கு வீழ்ந்த பலமான அடி என்பது ஒரு முக்கியமான உண்மை.

ஈரானியப் புரட்சியினது பாடங்களை இந்தோனீஸியாவின் விடுதலைப் போராட்ட சக்திகள் கற்று நாட்டின் 32 வருடப் பின்னடைவைச் சீர் செய்வார்கள் என நம்புவோமாக. அதற்கு அவர்கட்கு நம் எல்லாரதும் நல்வாழ்த்துக்களும் ஆதரவும் கிட்டுவதாக. இவ்வெற்றி இந்தோனீஸியாவிலும் இன்னும் பல நாடுகளிலும் மேலும் பெரிய வெற்றிகட்கு வழி வகுப்பதாக.

# கடனை கொடுத்துவிட்டு வாக்கு கேட்கிறார்கள்

நுவரெலியா மாவட்டத்தில் சுயேட்சையாக பெண்களின் என்.ஜீ.ஓ. ஒன்று போட்டியிடுகிறது. பெண்களின் அபிலாசை வென்றெடுப்பதற்காக நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு மாகாணசபைக்கு செல்லப்போவதாக கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் அந்த என்.ஜீ.ஓ. லீடர் தெரிவித்தார்.

ஆனால் நுவரெலியா மாவட்டத்திலே வேறு கதையை சொல்லுகிறார்கள். இதுவரை 25 ஆயிரம் குடும்பங்களுக்கு கடனுதவி செய்திருக்கிறதாம். அக்குடும்பங்களில் ஒரு குடும்பத்துக்கு ஒருவர் எமக்கு வாக்களித்தாலும் 25ஆயிரம் வாக்குகளைப் பெற்று வென்று விடுவோம் என்று கூறுகின்றனராம். அந்த என்ஜீ.ஓ.வின் பிரசாரம் கூட கடன் கொடுக்கப்பட்ட குடும்பங்களை சுற்றி சுற்றியே செய்யப்படுகிறதாம். உங்களுக்கு கடன் கொடுத்தோம். எங்களுக்கு ஓட்டுப் போடுங்க என்பதே அவர்களின் பிரசாரம்.

பெண்கள் தனியாகப் போட்டியிட்டு பெண் அபிலாசைகள் பற்றி விளாசித் தள்ளி வெற்றி பெறுவார்கள் என்று கதைத்தவர்களுக்கு மேல் கூறப்பட்ட உண்மைகள் சமர்ப்பணம் செய்யப்படுவதாக.

வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து வீட்டுத் தோட்டம் செய்வதற்காக கடனாக சில ஆயிரம் ரூபாய்களை கொடுத்துவிட்டு விலைமதிக்க முடியாத ஓட்டுக்களை கேட்டுக்கொண்டு வீட்டு வாசல்களில் வந்த நிற்கிறார் இந்த என்.ஜீ.ஓ. காரர்கள். இவர்களின் அரசியல் தந்திரம் எப்படி? என்று இராகலை தொழிலாளி ஒருவர் தெரிவித்தார்.

'கடன் கொடுத்ததற்காக வாக்குகளை கேட்பதற்கும் சாராயம் கொடுத்து வாக்குகளை கேட்பதற்கும் என்ன ஐயா வித்தியாசம்?' என்கிறார் கந்தப்பொளையில் உருளைக்கிழங்கு செய்யும் ஒருவர்.

வெளிநாட்டு நிறுவனங்களின் பணத்தைக் கொண்டு எமது நாட்டில் சீர் திருத்தம், சமூக ஆய்வு, சமூக அபிவிருத்தி என்ற பெயரில் எம் நாட்டு தொழிலாளிகள், விவசாயிகள் உட்பட சகல மக்களினதும் பொது உணர்வு அரசியல் உணர்வுகள் மழுங்கடித்தது மட்டுமன்றி எம்மக்களின் வாக்குகளை கொள்ளை அடித்து எம்மை ஆளவும் புறப்பட்டு விட்டன இந்த என்.ஜீ.ஓக்கள்.

இந்த குறிப்பிட்ட பெண்கள் என்ஜீ.ஓ. விற்கு தலைமை தாங்குகின்ற பெண்கள் ஒரு காலத்தில் இடதுசாரி முகாமுடன் தொடர்பு கொண்டிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு விரக்தியடைந்த இடதுசாரிகளை கொண்டுதான் என்.ஜீ.ஓ. க்கள் இலகுவான கைங்கரியத்தை செய்கின்றன.

நன்றி - நூலகத்திட்டம்



# நதி மூலமும் ரிஷி மூலமும்


நதிமூலமும் ரிஷிமூலமும் கேட்கக் கூடாது என்பார்கள். தமிழரசுக் கட்சியின் மூலமும் அந்த மாதிரி எல்லோரும் மறந்துவிட வேண்டிய ஒன்று என்று அதன் தலைமை கருத வேண்டிய நிலை 1957ல் ஏற்பட்டு விட்டது.

தமிழரசுக் கட்சியின் தோற்றத்திற்கான காரணம் மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டமை. இது மகிழ்ச்சி தர வேண்டிய ஒரு விடயம் இதன் பின்னணி பற்றி ஜி. ஜி. பொன்னம்பலம் வேறு கருத்துக்களைக் கொண்டிருந்த போதும் மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையைக் காரணங்காட்டி வடபிரதேசத்துத் தமிழர் கட்சியொன்று பிளவுபட்டது நல்ல விடயமே. இந்தப் பிரச்சனை தமிழரசுக் கட்சியின் அரசியல் வெற்றிக்குக் காரணமாக அமையவில்லை என்பது வருந்தத் தக்க உண்மை. இதைத் தமிழரசுத் தலைமை நன்றாகவே அறிந்திருந்தது. ஆயினும் அதன் நான்கு அடிப்படையான கோரிக்கைகளில் மலையகத் தமிழர்கட்குப் பூரண குடியுரிமையும் வாக்குரிமையும் வழங்கப்பட வேண்டும் என்பது ஒன்றாக இருந்தது.

1957ல் பண்டாரநாயகவும் செல்வநாயகமும் பேச்சுவார்த்தையின் மூலம் ஒரு உடன் பாட்டுக்கு வந்தபோது இந்தக் கோரிக்கையை விட மற்ற மூன்றும் பற்றி அரசாங்கமும் தமிழரசுக் கட்சியும் சமரசம் செய்து கொள்ள முடிந்தது. மலையகத் தமிழர் சார்பில் பேசத் தமிழரசுக் கட்சிக்கு எந்த அதிகாரமும் இல்லை என்ற அரசாங்க நிலைப்பாட்டை மிக எளிதாகவே தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொண்டது. எந்த ஒரு பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டுக்காகச் செல்வநாயகம் தீர்க்கதரிசி என்று கொண்டாடப் பட்டாரோ அந்தப் பிரச்சனையைக் கைகழுவி விட்டு ஸ்ரீ. ல. சு. கட்சித் தலைமையிலான அரசாங்கத்துடன் உடன்பாடு காண்பதற்கு அந்தச் செல்வநாயகம் தயங்கவில்லை. சிங்களம் மட்டுமே சட்டம் தொடர்பாக எழுப்பப்பட்ட போர் முழக்கங்கள் போல எதுவுமே மலையக மக்கள் தொடர்பாகத் தமிழரசுத் தலைமையால் எழுப்பப்படவும் இல்லை. மலையக மக்களது பிரச்சினை ஒரு சடங்கு போல தமிழரசுக் கட்சியின் வேலைத் திட்டத்தில் ஒரு பகுதியாக இருந்தது. பின்பு நதிமூலம், ரிஷிமூலம் போல கேட்கப்படக் கூடாத ஒன்றாக மெல்ல மறந்து போய் விட்டது.

மேற்கூறியவாறு தனது நிலைப் பாட்டினின்று வழுவியதன் மூலம் தமிழரசுத் தலைமை அதன் தீர்க்கதரிசனமான "இன்று அவர்கட்கு, நாளை நமக்கு" என்ற கூற்றில் உள்ள அவர்கள் நாங்கள் வேறுபாட்டை முற்றாக உறுதிசெய்தது. வடபிரதேசத் தேர்தல் அரசியலில் இதில் அதிசயிக்க அதிகமில்லை. உண்மையில் தீர்க்க தரிசனத்தின் முக்கியமான பகுதி "நாளை நமக்கு" என்பது மட்டுமே யாதலால் சிங்கள மொழிச் சட்டம் பற்றிய கவனமே முக்கியமான ஒன்றாக இருந்தது.

சிங்கள மொழிச் சட்டத்தை வைத்தே இருபது வருட காலமாக அரசியல் நடத்திய தமிழரசுக் கட்சி தன்னைப் பாராளுமன்றத்திற்குள் ஏற்றி அருளிய இந்த அணியையும் ஒரு சடங்காகவே கையாண்டது என்பது பலராலும் நினைக்கப்படுவதில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. அதைப் பற்றிப் பின்னர் கவனிப்போம். ஆயினும் சிங்களத்தை அரச கரும மொழியாக 1957ல் ஏற்ற காரணத்திற்காகக் கம்யூனிஸ்ட் கட்சியையும் 1964ல் ஏற்ற காரணத்திற்காக சமாஜக் கட்சியையும் துரோகிகளாகவும் தமிழர் எதிரிகளாகவும் கண்ட தமிழரசுக் கட்சி பண்டாரநாயகா-



## தந்தையும் மைந்தரும் (7)

செல்வநாயகம் உடன் படிக்கையில் மறைமுகமாகவேனும் சிங்களம் மட்டுமே சட்டத்தை ஏற்றுக் கொண்டது என்பது ஒரு முக்கியமான உண்மை.

அதைவிடச் சிங்கள மக்கள் மத்தியில் தமது நிலைப்பாட்டை விளக்குவதாயின் சிங்கள அரசியற் கட்சிகளாகத் தாங்கள் அடையாளம் காட்டிய இடதுசாரிகளது ஒத்துழைப்பும் அவசியம். அத்தகைய ஒரு கூட்டணிக்குத் தமிழரசுக் கட்சி ஆயத்தமாக இருக்கவில்லை. அதற்குப் பலவேறு காரணங்களும் இருந்தன.

தமிழ் மக்களது மொழியுரிமைகளைச் சிங்களமே அரச கருமமொழி என்ற சட்டவரம்பை மீறாமல் எவ்வாறு பேணுவது என்ற அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைகள் நடந்தன. அந்த அடிப்படையில் வந்தடைந்த முடிவை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டனர். தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் வடக்குக்-கிழக்கு மாகாணங்களில் பிரதேச சபைகளை நிறுவுவது என்ற உடன்பாடு தமிழரசுக்கட்சி கேட்ட சமஷ்டிக் கோரிக்கையைத் திருப்தி செய்ய விட்டாலும் தமிழரும், முஸ்லிம்களும் செறிவாக வாழ்ந்த பாரம்பரியப் பகுதிகளில் அவர்களது மொழி, பண்பாடு, கல்வி, தொழில் போன்ற விடயங்களில் பேரினவாதத் தலையீடற்ற வளர்ச்சிக்கான வாய்ப்பை உறுதிப்படுத்தப் போதுமானதாயிருந்தது. சிங்களக் குடியேற்றம் திட்டமிட்ட முறையில் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே டி. எஸ். சேனநாயகவால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அது மட்டக்களப்பு மாவட்டத்தில் அம்பாறைப் பகுதியிலும் பின்பு திருகோணமலைப் பகுதியில் கந்தளாய், அல்லைப் பகுதிகளிலும் அரசாங்க உதவியுடன் நடத்தப்பட்டதன் நோக்கம் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர்களைச் சிறுபான்மையினராக்கி அவர்களது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதுமாகும். இது பற்றியும் பண்டாரநாயக செல்வநாயகம் உடன்படிக்கையில் உடன்பாடு காணப்பட்டது. திட்டமிட்ட அரசாங்க குடியேற்றங்களில் குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு முன்னுரிமை. அங்கு மக்கள் வாழும் விகிதாசாரத்தைப் பாதிக்காத முறையில் வெளியிலிருந்து குடியேற்றம் என்பன ஏற்றுக் கொள்ளப்பட்டன. குடியேற்றத் திட்ட நடைமுறைப்படுத்தலில் பிரதேச சபைகட்கு நிர்வாக அதிகாரம் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேற் கூறியவற்றை நோக்கும் போது தமிழரசுக்கட்சியின் நான்கு கோரிக்கைகளில் மலையக மக்களது பிரச்சனை போக மற்ற மூன்றினதும் அடிப்படையான நியாயங்கள் பண்டாரநாயகாவால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கேற்றவாறான ஒரு தீர்வு பற்றியும் உடன்பாடு காணப்பட்டது. இத் தீர்வுக்குக் கம்யூனிஸ்ட் கட்சி தனது பூரணமான ஆதரவை வழங்கியது என்பதும் இங்கு வலியுறுத்தப்பட வேண்டியது.

மொத்தமாக நோக்கும் போது கம்யூனிஸ்ட் கட்சி 1957ல் சிங்களமே அரச கருமமொழி என்ற நிலையை ஏற்றுத் தமிழ் பேசும் மக்களது மொழியுரிமையைப் பேணுவது என்று மேற்கொண்ட முடிவுக்கும் பண்டாரநாயக - செல்வநாயகம் உடன்படிக்கையில் சிங்களமே அரச கருமமொழியாக இருக்க வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழை நிருவாக மொழியாக கொள்வது என்பதற்கும் சாராம்சத்தில் ஒரு வேறுபாடுமில்லை. ஆயினும் கம்யூனிஸ்ட் கட்சி 1957முதல் தமிழ்த் துரோகிகளாகும் தமிழின விரோதிகளாகவும் கட்சியாகவே காட்டப்பட்டு வந்தது. சமசமாஜக் கட்சியுடன் தமிழரசுக் கட்சிக்கு இருந்த உறவு இதைவிடச் சிறிது சுமுகமாக இருந்தாலும் சிங்களக் கட்சிகளை நம்பாதே என்ற கருத்தாக்கமே தமிழரசுக் கட்சியின் பிரசாரத்தின் அடிப்படையாக அமைந்தது.

பண்டாரநாயக-செல்வநாயகம் ஒப்பந்தத்தை கிழித்தெறியுமாறு கோரி ஜே. ஆர். ஜயவர்த்தன மேற்கொண்ட கண்டி யாத்திரையை ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் இருந்த எஸ். டி. பண்டாரநாயகாவின் தலைமையிலான நடவடிக்கையே முறியடித்தது என்பதைத் தமிழரசுக் கட்சியினர் என்றுமே கூற விரும்புவதில்லை. பண்டாரநாயகா-செல்வநாயகம் உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு ஸ்ரீ.ல.சு. கட்சியுள்ளும் சில எதிரிகள் இருந்தனர். அதைவிட அரசாங்கத்தில் பங்காளியாக இருந்த கே.எம்.பி. ராஜரத்ன, ஆர். ஜி. சேனநாயக போன்ற இனவாதிகளும் அந்த உடன்படிக்கையை விரும்பவில்லை. உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு இரு தரப்பிலும் ஒத்துழைப்பு அவசியமாக இருந்தது. அரசாங்கத் தரப்பில், ஆளுங்கட்சிக்குள் பண்டாரநாயகாவால் எதிர்ப்பை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடிந்தது. ஆயினும் சிங்கள மக்களிடையே நடத்தப்பட்ட இனவாதப் பிரசாரத்திற்கு எதிர் நடவடிக்கை எடுப்பதாயின் வெகுசன மட்டத்தில் நடவடிக்கைக்கான தேவை இருந்தது. தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை இது பாராளுமன்ற வரையறைகட்குத் தீர்த்துக் கொள்ள இயலுமான ஒரு பிரச்சனை மட்டுமே. எனவே இந்தத் தீர்வின் நியாயத்தைச் சிங்கள மக்களுக்கு விளக்குவது பற்றியோ தமது நோக்கம் இலங்கையைப் பிரிப்பதல்ல என்று சிங்கள மக்களை நம்ப வைப்பதோ அவர்களுக்கு முக்கியமான ஒன்றாகத் தெரியவில்லை.

அதைவிடச் சிங்கள மக்கள் மத்தியில் தமது நிலைப்பாட்டை விளக்குவதாயின் சிங்கள அரசியற் கட்சிகளாகத் தாங்கள் அடையாளம் காட்டிய இடதுசாரிகளது ஒத்துழைப்பும் அவசியம். அத்தகைய ஒரு கூட்டணிக்குத் தமிழரசுக் கட்சி ஆயத்தமாக இருக்கவில்லை. அதற்குப் பலவேறு காரணங்களும் இருந்தன.

இடதுசாரி அரசியல் தமிழரசுக்கட்சித் தலைமையின் நலன்களுக்கு இசைவான ஒன்றல்ல. எனவே கம்யூனிசம் ஒரு பயங்கரமான பொருள் என்றவாறான சிந்தனை அவர்கட்குப் பயனுள்ளதாகவே இருந்தது. மறுபுறம் சிங்கள, தமிழ் புரிந்துணர்வுக்கு வழிகோலக் கூடிய ஒரு கூட்டணி தமிழரசுக் கட்சியின் குறுகிய தமிழ் தேசியவாத அரசியலுக்கு ஆபத்தானது. தங்களது சமஷ்டிக் கோரிக்கை என்னவென்று சிங்கள மக்களுக்கு விளக்க அவர்கள் என்றுமே முயலவில்லை. அதேவேளை சிங்கள இனவாத விஷமிகள் அதைப் பிரிவினை என்று திரித்துக் கூறிச் செய்து வந்த பிரசாரம் தென்னிலங்கையிற் பரவலாக நம்பப்பட்டது. தமிழரசுக் கட்சி என்ற தமிழ்ப் பேரும் சமஷ்டிக் கட்சி என்று ஆங்கிலப்பேரும் உண்மையில் தமிழரசுக் கட்சியின் பிரிவினை நோக்கங்கள் பற்றிய சந்தேகங்களைத் தூண்ட விரும்பியவர்கட்கு வசதியாயின.

தேசிய இனப்பிரச்சனையின் தீர்வில் வெகுஜன அரசியலின் முக்கியத்துவத்தைத் தமிழரசுக்கட்சி அறியவில்லை. என்பதைவிட அதில் அவர்கட்குப் பரிச்சயம் இல்லை என்பது கூட உண்மை. அதைவிட வெகுஜன அரசியல் தமிழரசுக் கட்சி வலியுறுத்திய நான்கு பிரச்சனைகளை விட வேறு பிரச்சனைகளையும் அரசியல் அரங்கில் முன்னணிக்குக் கொண்டுவரும் என்பதுபற்றி அவர்கள் அறியாமல் இருந்திருக்க முடியாது. ஆயினும் மொழிப் பிரச்சனை மட்டுமே அவர்களது அரசியலின் பிரதான பிரச்சனையாக மட்டுமன்றி ஒரே பிரச்சனையாகவுங் கூட 1970 வரையில் இருந்தது என்றால் மிகையாகாது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் பற்றிய பேச்சு வார்த்தைகள் நடந்த போதும் அதற்கு எதிரான அரசியல் நடவடிக்கைகள் பற்றித் தமிழரசுக் கட்சிக்கு எந்தவிதமான தெளிவும் இருக்கவில்லை.

தமிழரசுக்கட்சி வெகுஜனப் போராட்டத்திலிருந்து எட்ட நிற்க நேர்ந்ததற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அது வட பகுதித் தமிழ் சமுதாயத்திற்குள் இருந்த இன்னொரு "அவர்களும், நாங்களும்" தொடர்பானது. இந்த "அவர்களும் நாங்களும்" பிரச்சனையே கம்யூனிஸ்டுகள் மீதான பகைமைக்கு ஒரு முக்கிய காரணமுமாகும்.

# பழி வாங்காத மந்திரிக்கு மீண்டும் பதவி வேண்டுமாம்

மலையக கல்வி வளர்ச்சிக்காக தொடர்ந்து சேவையாற்ற இன்னும் சந்தர்ப்பங்களை தரும்படி கேட்கிறார் மத்தியமாகாண கல்வி அமைச்சர் வீ. புத்திரசிகாமணி. இவ்வாறு கோரிக்கை விட்டு கடிதங்களை எழுதி மலையக ஆசிரியர்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

மாகாணசபை தேர்தலில் வாக்குகளை அவருக்கு அளிக்கும்படி கேட்டு அவர் எழுதியுள்ள கடிதங்களில் 'நான் மலையக ஆசிரியர்களை அரசியல் ரீதியாக பழிவாங்கியதாக குற்றம் சுமத்துகிறார்கள். அதில் எவ்வித உண்மையும் இல்லை. நான் மலையக கல்வி வளர்ச்சியின் நன்மை கருதியே சகலவற்றையும் செய்தேன்' என்று எழுதியுள்ளார்.

அவர் கூறுவது உண்மையோ, குற்றச்சாட்டு உண்மையோ என்பதைவிட சில ஆசிரியர்கள் பழிவாங்கப்பட்டே இடமாற்றம் செய்யப்பட்டதாக இலங்கையின் உயர்நீதிமன்றம் ஒரு வழக்கில் தீர்ப்பளித்திருந்தது. புத்திரசிகாமணி அவர்களால் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் சிலர் மலையக ஆசிரியர் மன்றத்தினூடாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். அவ்வழக்கில் புத்திரசிகாமணியும் ஒரு பிரதிவாதி. அவர் செய்த அவ் இடமாற்றங்கள் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. அவ்வாசிரியர்களுக்கு மத்தியமாகாண கல்வி அமைச்சு நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. இதைத்தவிர தகுதி இருந்தும் இடமாற்றங்களை பெறமுடியாதவாறு தடுக்கப்பட்ட சம்பவங்கள் பத்திரிகைகளில் அறிக்கை செய்யப்பட்டிருந்தன.

நுவரெலியா மாவட்ட பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர விஞ்ஞான வகுப்புக்களை நடத்த ஆசிரியர்கள் இல்லாத படியால் மாணவர்கள் வேறுமாவட்டங்களுக்கு சென்று படிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். வசதியுள்ளவர்களால் மட்டுமே அவ்வாறு பிற மாவட்ட பாடசாலைகளுக்கு செல்ல முடியும் என்பதுடன் பிறமாவட்டப் பாடசாலைகளில் அனுமதி கிடைப்பதும் இலகுவான விடயமல்ல.

அதுமட்டுமல்ல இரண்டு வருடங்களாக க.பொ.த. உயர்தர கணித பாடங்களை படித்த மாணவர்களால் பரீட்சை எழுதமுடியவில்லை. காரணம்

3ம் பக்கம் பார்க்க

நன்றி - நூலகத்திட்டம்






# ஒரு புதிய வட்டம்

இப்போதெல்லாம் கல்வித்துறையில் விஞ்ஞானம் பற்றி அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. சின்னஞ்சிறு வயது தோடக்கமே ஆரம்ப வகுப்புகளிலிருந்தே பள்ளிக் கூடங்களில் விஞ்ஞானத்தைப் படிப்பிக்க முயலுகிறார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்க முயற்சிதான். பிள்ளைகளுக்கு அறிவியல் நாட்டம் உண்டாகும், ' அறிவியல் நோக்கு அதிகரிக்கும், எதையும் அறிவியல் மனப்பான்மையுடன் அணுகும் பழக்கம் உண்டாகும் இப்படியெல்லாம் நாம் எதிர்பார்ப்போம்.

ஆனால் உண்மையில் நடப்பதென்ன?

பிள்ளைகள் விஞ்ஞான மனப்பாங்கு பெற்றவர்களாக வளர்கிறார்களா?

யோசிக்க வேண்டிய கேள்விகள் தான்.

முன்னொரு காலத்திலே கல்வி என்பது சில தகவல்களை உள்வாங்கிக் கொள்வது, சில சூத்திரங்களையும் பாட்டுகளையும் பாடமாக்கி வைத்திருப்பது என்ற அளவிலே முடங்கிக் கிடந்தது. இப்படிப்பட்ட முடக்கம் ஆரோக்கியமானதல்ல என்பதனாலேயே தான் பள்ளிப்படிப்பிலே விஞ்ஞானக் கல்வியின் முதன்மையைக் கல்வி நிபுணர்களும், அதிகாரிகளும், அறிஞர்களும் அழுத்தி வற்புறுத்தினர்.

ஆனால் அதன் பலனாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட விஞ்ஞானக் கல்வி விரி சிந்தனையையும், திறந்த மனப் பான்மையையும் வலுப்படுத்தியதா? இந்தக் கல்வியைப் பெற்ற மாணவர்களிடத்திலே தருக்க ரீதியான, சுதந்திரமான சிந்தனைப் பழக்கங்கள் சிறப்படைந்துள்ளனவா? இல்லையானால் அதற்குக் காரணம் என்ன?

கல்வி முன்னேற்றத்தை அளவிடுவதற்கென அமைக்கப்பட்ட பரீட்சை முறைகளும் பரீட்சையில் வெற்றி பெறுவதற்கெனக் கண்டு பிடிக்கப்பட்ட குறுக்கு வழிகளும் தான் பிரதான காரணங்கள் என்று தோன்றுகிறது. பரீட்சையின் சாராம்சமான இயல்பாக இன்று அமைவது மாணவரிடையே கடுமையான போட்டியை ஊக்கப்படுத்தி விடுகிற போக்குத்தான். சோதனைக்கு என்னென்ன கேள்விகள் வரும்? எந்த எந்த இடத்திலே என்னென்ன அடையாளங்களைப் போடவேண்டும்? எந்த எந்த ரியூற்றறிகளிலே சரியான மறுமொழிகளைத் சொல்லித் தருவார்கள்? பேப்பர்க் க்ளாசுகள் எங்கெங்கே நடக்கின்றன? அந்தக் கிளாசுகளிலே எவை திறமானவை? எந்த ரியூசன் மாஸ்ரர் வாழைப்பழங்களை உரித்துத் தருவதிலே கெட்டிக்காரர்? இந்தவிதமான கேள்விகள் தான் பரீட்சைப் போட்டியில் மூழ்கி இருக்கும் மாணவர்களின் சிந்தனை, செயற்பாடு, திறமான தேர்ச்சித் தத்துவம்!

அடையாளமிடும் நுண் முறைகளையும் அறிந்து கொள்வதோடு பாடமாக்க வேண்டிய பகுதிகளையும் எப்படியாவது கண்டுபிடித்து அவற்றைச் 'சப்பு சப்பென்று' சப்பினால் 'வெற்றி நிச்சயம்'. கடைசியிலே பார்க்கப் போனால் சில தந்திர உத்திகளைத் தெரிந்து கொள்வதும், யந்திரப்பாங்கான மனனமும் பாராயணமும் தான் நம் மாணவர்களின் கல்வி நடைமுறையின் தேறிய பலன்கள் என்று கூடச் சொல்லலாம்.

இந்த அழகிலே விஞ்ஞான நோக்கை வளர்க்கும் இலக்கு' எப்படி நிறைவேறும்? ஒரு புறத்திலே விஞ்ஞான மனப்பான்மையை விருத்தி செய்வதான இலட்சியம் தோல்வி பெறுகிறது. மறுபுறத்திலே கூட்டுறவு, ஒத்துழைப்பு, புரிந்துணர்வு, நல்விளக்கம் என்ற பண்புகளுக்கு எந்த விதமான ஊக்கமும் கிடைப்பதில்லை.

சரி மாணவர்கள்தான் இப்படி என்றால் கற்றறிந்த பெரியவர்கள் ஏதோ மனநலத்திலே சிறந்து திகழ்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. விஞ்ஞானம் படித்தோம் பட்டம் பெற்றோம் என்று நம்மிடையே நடமாடும் புத்தியாளர்கள் கூட தம் படிப்புத் துறைக்கு அப்பாலே விஞ்ஞான மனப்பான்மையைப் பிரயோகிப்பது மிகவும் குறைவு. பெரும்பாலானவர்கள் வழி வழி வந்த பழக்க வழக்கங்கள் சம்பிரதாயங்கள் அவற்றின் தேவை. பயன்பாடுபற்றி அதிகம் யோசிக்காமற் கடைப்பிடிக்கும் போக்கு உடையவர்களாக இருப்பதை நாம் அடிக்கடி காண்கிறோம். மற்றும் பலர் அறிவுக்கு ஒத்துவராத, பிறருக்குப் பாதகமான வீண் செலவுகளுக்கு வழிவகுப்பனவான செயல்களில் ஈடுபடுதற்குக் கூசுவதில்லை. இவ்விதமான சடங்காசாரங்களையும் நடத்தைகளையும் மேன்மேலும் விரிவாக்கி, ஆடம்பரமாக்கிப் படாடோபமாக்கிக் கொண்டு போகிறார்கள். முன்பெல்லாம் தியேட்டர்களுக்குப் போய் இரண்டு அல்லது மூன்று படங்களைப் பார்த்துவிட்டு வந்தவர்கள் இப்பொழுது தத்தம் வீடுகளிலே இரவு நேரம் முழுவதும் மின் பிறப்பாக்கியின் ஓயாத இரைச்சலுக்கு நடுவிலே பத்து, பன்னிரண்டு, பதினைந்து மணித்தியாலயங்களுக்குக் கூடத் தொடர்ந்து பல படங்களைப் பார்க்க விரும்புகிறார்கள். முன்பு சாமத்திய வீடுகளிலே நாலைந்து ஆலாத்திகளுடன் அலுவலை முடித்தவர்கள் இப்பொழுது வீடியோக் கலைஞர்களின் நெறியாழ்கைக்குப் பெண்பிள்ளைகளை நடிக்க வைத்து பதினைந்திருபது ஆலாத்திகளை எடுக்கிறார்கள். நீர்த்தொட்டியிலே பூக்களை ஓங்கவிட்டு நீராடுதல் உட்பட ஊஞ்சல், சயிக்கிளோட்டம் என்று பலவாறான மிக்சிங் வேலைகளையும் நடத்துகிறார்கள். விஞ்ஞானப் பிரயோகமான தொழில் நுட்பக் கருவிகளை ஆக்கபூர்வமாக எத்தனை எத்தனை வழிகளிலே கையாளலாம் என்பது பற்றிய விழிப்போ, விரிசிந்தனையோ இல்லாத மந்தித்துப்போன தேக்கநிலைக்கு இவற்றைவிடச் சிறந்த எடுத்துக் காட்டுகளும் உண்டோ? இத்தனை கருவி வசதிகளும் ஆளணிகளும் கைவசம் இருக்கும்போது பெறுமதி வாய்ந்த கலைப்படைப்புக்களையோ பயன் வளம்மிக்க ஆவணப் பதிவுகளையோ செய்யும் எண்ணம் யாருக்கும் தோன்றாதது விந்தையிலும் விந்தையாகும்.

தமது படிப்பு வட்டத்துக்கு அப்பாலும் விஞ்ஞான மனப் பான்மையையும் பகுத்தறிவையும் வெறுத்தும் ஆற்றல் உண்மையாக இருக்குமானால் தம் வாழ்வியற் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளும் முயற்சியில் இன்னும் ஊன்றிய, ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தலாம் அல்லவா?

எங்களுடைய விஞ்ஞான மனப்பான்மையின் 'படித்தரத்தைப் பளிச்சென்று காட்டும் ஒரு சங்கதி நினைவுக்கு வருகிறது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலே 'புறநிலைப் படிப்புகள் அலகு' என்று ஒன்று உண்டு. அந்த அலகின் முயற்சியினாலே பல்கலைக்கழக மாணவர்கள் அல்லாத மற்றவர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சி நெறிகளிலே சேர்ந்து படிக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி நெறிகள் ஆங்கிலத்திறன், ஒளிப்படக்கலை, உளவளத் துறை, பத்திரிகை இயல், சைவ சித்தாந்தம் முதலிய பல துறைகளைச் சார்ந்தனவாய் உள்ளன. அந்தப் பயிற்சி நெறிகளுக்கு அண்மையிலே விண்ணப்பங்கள் கோரியிருந்தனர். மிகப் பெரும்பான்மையானவர்கள் விரும்பி விண்ணப்பித்த துறை எது தெரியுமா? சோதிடக்கலை! ஆம் அவசரமாகவும் அவசியமாகவும் நாம் தேர்ச்சி பெற்றாக வேண்டியது சோதிடக் கலையிலே தான். இது மகேசன் தீர்ப்பல்ல. மக்கள் தீர்ப்பு.

இப்படிப்பட்ட மப்பு மந்தாரமான சூழ்நிலையிலே ஆங்காங்கே சிற்சில வெளிசங்களும் கண்சிமிட்டத்தான் செய்கின்றன. இந்த வெளிச்சங்களில் ஒன்று என 'சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம்' என்னும் அமைப்பைக் குறிப்பிடலாம். நோன்மதி எனப்பட்ட போயா விடுமுறைநாள் தோறும் இந்த வட்டம் திருநெல்வேலியிலுள்ள பலாலி ஆசிரியர் கல்லூரியிலே கூடுகிறது. இதுவரை மூன்று கூடல்கள் நடைபெற்றுள்ளன. இளைஞர்கள் சிலர் இந்த வட்டத்தை இயங்க வைப்பதில் மிகுந்த ஊக்கத்தோடு செயற்படுகிறார்கள் கற்றறிவாளராகிய திரு. ஏ. ஜே. கனகரட்ணா அவர்கள் இந்த வட்டத்தின் தலைவராய் அமர்ந்துள்ளார். சமூகம் பற்றிய பல்வேறு முகங்களையும் உலக அரங்கிலும் உள்நாட்டிலும் எதிர் நோக்கப்படும் பல்வேறு நிகழ்ச்சிப் போக்குகளையும், உள்ளோட்டங்களையும் பகுத்தறிவு பூர்வமாக விளங்கிக் கொள்ளும் அறிவியக்க முயற்சி என்றே நாம் இந்தச் 'சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின்' உதயத்தைக் கருதவேண்டும். இந்த முயற்சி கிரமமாகத் தொடர்ந்து நடக்குமானால் எதிர்காலத்தில் நல்ல பலன்களைத் தரும் என்பதில் ஐயமில்லை. 'சமூக விஞ்ஞானிகள்' என்ற உயர்நிலை மட்டத்தில் வல்லுநர்களின் உள்வட்டமாக அல்லாமல் 'கொண்டும் கொடுத்தும்' அறிவுத் தெளிவைத் தேடிக்கொள்ளும் ஆரோக்கியமான படிப்பு வட்டமாக இது இருப்பது போற்றி வரவேற்கத் தக்கது.

--ஐ.ஐ.ஓ--

## நன்றி நவிலல்
## (மலைமதி)

மதிப்பிற்குரிய தலைவர்களே !
நேற்றுடன் முடிந்தன
பிரசாரங்கள்
இன்று நடந்தது
தேர்தல்.
நாளை முதல்
நீங்களெல்லாம்
மந்திரிகள்
பிறகு
நீங்கள் யாரோ
நாங்கள் யாரோ
இன்னுமொரு
தேர்தல்
வரும்வரை!

போனமாதம் முழுவதுமே
நீங்கள்
ஊத்தின சாராயம்
போட்ட சாப்பாடுகள்
கொடுத்த 'வீடுகள்'
கலியாணங்கள்
சடங்குகள்
திருவிழாக்கள்
கேதங்களுக்கு
நீங்கள் அடித்த
'விசிட்டுகள்'
அப்பப்பா!
பெரிய கரிசனைதான்
எங்கள்
நலனில்
இல்லை!.
எங்கள்
வாக்குகளில்
நினைக்க
சிரிப்பாயும்
இருக்கிறது.

நேற்றுவரை
நாங்கள்
உங்கள் மூடிய விழிகளின்
கன்னிகள்.
நாளைமுதல்
அலவன்சுகள்
சம்பளங்கள்
கிம்பளங்கள்
வாகனங்கள்
கண்டிராக்குகளில்
உங்களின் திறந்த விழிகளின்
கவனங்கள்.

எங்கள்
மாத சம்பளம்
பிரசாவுரிமை
வீட்டுப்பிரச்சினை
காணிப்பிரச்சினை
வேலையில்லாமை
என்றும்
பிரச்சினையாகவே
செழித்திருக்கும்

மாதாந்தம்
வராதோ தேர்தல் என்று
நப்பாசை தான்
எப்போதுமே கிடந்திருக்க
எங்கள்
காலடியில்.............

நன்றி - நூலகத்திட்டம்



# புதிய இடதுசாரி முன்னணியின் வேலைத்திட்டம் மலையக மக்களின் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கிறது.

# இளையதம்பி தம்பையா அளித்த பேட்டி

கேள்வி:

மலையகத்தின் பிரபல தொழிற்சங்க வாதிகளையும், பாராளுமன்ற வாதிகளையும் மலையக மக்கள் நிராகரிக்கின்றனர் இந்நிலையில் புதிய ஜனநாயகக் கட்சியையோ புதிய இடதுசாரி முன்னணியையோ அங்கீகரிப்பார்கள் என்று நம்புகிறீர்களா?

பதில்:

பிரபல தொழிற்சங்கவாதிகள் எனப்படுவோரையும், பாராளுமன்ற வாதிகள் எனப்படுவோரையும் மலையக மக்கள் நிராகரித்திருக் கிறார்கள் என்பதே எமது கொள்கைகளுக்கு கிடைத்திருக்கும் அங்கீகாரமாகும். புதிய-ஜனநாயகக் கட்சி கடந்த 20 வருடங்களாக இலங்கை மக்களிடையே, மலையக மக்களிடையே மாற்று அரசியல் பாதையையும், மாற்றுத் தலைமையையும் உயர்த்திப் பிடித்து வேலை செய்து வருகிறது. பாரம்பரிய தொழிற்சங்க பேரம் பேசும் பாராளுமன்ற தலைமைகளை மலையக மக்கள் நிராகரித்திருக்கிறார்கள் என்பது பலவிதமாக அச்சுறுத்தல்களுக்கும், அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் முன்னெடுக்கப்பட்ட எமது வேலைகளுக்குக் கிடைத்த அங்கீகாரமே.

வலுவான மாற்று இடதுசாரி அரசியல் சக்தியை கட்டியெழுப்பி மாற்று இடதுசாரி அரசியல் பாதையில் முன்னேறுவதில் மலையக மக்களின் பங்களிப்பு பெரிதாகவே இருக்கும். அப்பங்களிப்பு தான் இனிமேல் மலையக மக்கள் மத்தியில் எமக்கு கிடைக்க வேண்டிய அங்கீகாரமாகும். சரியான அரசியல் பாதையையும் சரியான தலைமையையும் மலையக மக்கள் நிராகரிக்கவில்லை.

கேள்வி:

மலையக மக்கள் இடதுசாரிகளை வெறுத்த நிலைமை மாறிவிட்டதாக கருதுகிறீர்களா?

பதில்:

சரியான இடதுசாரிகளை மலையக மக்கள் நிராகரிக்கவில்லை. அப்படியாயின் நாம் தொடர்ந்து 20 வருடங்கள் மலையக மக்கள் மத்தியில் வேலை செய்திருக்க முடியாது. 1970-77 ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் மலையக மக்கள் இனரீதியாகவும், வர்க்க ரிதியாகவும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அன்றைய ஆட்சியில் பாரம்பரிய இடதுசாரிகள் பங்காளியாக இருந்தபடியால் அவர்களை மலையக மக்கள் வெறுத்தனர். அதே இடதுசாரிகள் இன்றைய ஆட்சியிலும் சுதந்திரக் கட்சியுடன் இணைந்திருக்கின்றனர்.

புதிய ஜனநாயகக் கட்சி அவ்வகையான கட்சியல்ல. புதிய இடதுசாரி முன்னணியிலும் அவ்வகையான கட்சிகள் இல்லை. முதலாளித்துவ கட்சிகளுடன் சேர்ந்து கூட்டரசாங்கம் அமைப்பதை புதிய ஜனநாயகக் கட்சியும் ஏற்கவில்லை. புதிய இடதுசாரி முன்னணியும் ஏற்கவில்லை.


புதிய இடதுசாரி முன்னணி ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அமைந்தது. அவ்வேலைத்திட்டத்தில் மலையக மக்களின் இன ரீதியான, வர்க்க ரீதியான உரிமைகளை வென்றெடுப்பது பற்றி விஷேடமாக அக்கறை கொள்ளப்பட்டுள்ளது.

பழைய வகையறா இடது சாரிகளிலிருந்து புதிய ஜனநாயகக் கட்சியினரும், புதிய இடதுசாரி முன்னணியினரும் வேறுபடுகின்றனர்.

எனவே மலையக மக்கள் உண்மையான இடதுசாரிகளை வெறுத்த நிலையொன்று இருக்கவில்லை. உண்மையான இடதுசாரிகளை அங்கீகரிக்காத நிலைமையும் ஏற்படப் போவதில்லை.

கேள்வி:

மலையக மக்களுக்கு புதிய அரசியல் அடிப்படையிலான புதிய தலைமைத்துவம் அவசியம் என்று கூறிவரும் நீங்கள் தற்போது உங்களது கட்சியும் அங்கம் வகிக்கும் புதிய இடதுசாரி முன்னணி எவ்வாறு மலையக மக்களுக்கான தலைமைத்துவத்தை உறுதி செய்யும் என்று கூறுவீர்களா?



வலுவான மாற்று இடதுசாரி அரசியல் சக்தியை கட்டியெழுப்பி மாற்று இடதுசாரி அரசியல் சக்தியை கட்டியெழுப்பி மாற்று இடதுசாரி அரசியல் பாதையில் முன்னேறுவதில் மலையக மக்களின் பங்களிப்பு பெரிதாகவே இருக்கும்.

பதில்:

இலங்கையின் இன்றைய சூழ்நிலையில் முழு மக்களையும் நேரடியாக இணைக்கக் கூடிய மத்திய தலைமைத்துவம் என்பது சாத்தியமானதாக இல்லை. ஆனால் ஒவ்வொரு பிரதேசவாரியாகவும் மக்கள் வாரியாகவும் கட்டி வளர்க்கப்படும் சரியான தலைமைத் துவத்திற்கும் அவற்றையெல்லாம் நாடளாவிய ரீதியில் ஒன்றிணைக்கக் கூடிய சரியான மத்திய தலைமைத் துவத்திற்கும் நெருங்கிய தொடர்பும், புரிந்துணர்வும் இல்லாதவிடத்து சரியான பிரதேச தலைமையும் சாத்தியமில்லை. சரியான மத்திய தலைமைத்துவம் சாத்தியமில்லை.

இன்றைய மலையக விஷேட சூழ் நிலைகளுக்கு ஏற்ப புதிய அரசியல் அடிப்படையிலான தலைமைத்துவம் கட்டிவளர்க்கப்பட வேண்டியதும் வரலாற்றுத் தேவையாகும். அதேவேளை ஐ.தே.கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, போலி இடதுசாரி தலைமைகளுக்கு மாற்றாக நாடளாவி மாற்று இடதுசாரி தலைமையை உறுதி செய்யும் நோக்குடனேயே புதிய இடதுசாரி முன்னணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மலையகத்தின் விசேட சூழ்நிலை களுக்கேற்ப சரியான மாற்று இடதுசாரி தலைமையை கட்டிவளர்க்கும் முயற்சிகள் பரந்தளவில் எடுக்கப்பட்டு வருகின்றன. அம்முயற்சிகள் மலையகத்தில் ஒரு முன்னணியை ஆரம்பிக்கும் நடவடிக்கையாக இன்னும் வளர்ச்சியடையவில்லை.

ஆனால் இடதுசாரி முன்னணியை ஆரம்பிப்பதில் மாக்சிஸ்ட்டு லெனினிஸ்டுகள் மேற்கொண்டது போன்று மலையகத்தின் புதிய தலைமைத்துவத்தை கட்டி வளர்க்கும் முயற்சிகளில் மலையகத்தில் மாக்சிஸ்ட்டு லெனினிஸ்டுகள் முன்னணிப் பங்கை வகித்து வருகின்றனர். இடதுசாரி அடிப்படையைக் கொண்ட மலையக கூட்டுத் தலைமையை கட்டி வளர்ப்பதில் அவர்கள் வெற்றி பெறுவார்கள். அதற்கு புதிய இடதுசாரி முன்னணி உறுதுணை யாக இருக்கும் என்று நம்பலாம். இம்முன்னணியிலுள்ள கட்சிகள் இடதுசாரி அடிப்படையை கொண்டு கூட்டாக இயங்கும் அதேவேளை தனித்தனி கட்சிகளாக தனித்துவ மாகவும் இயங்குகின்றன.

எனவே மலையகத்தின் புதிய தலைமைத்துவத்தை கட்டி வளர்க்கும் வேலைத்திட்டங்களில் ஒரு அம்சமாக நாடளாவிய ரீதியில் புதிய இடதுசாரி முன்னணியின் தோற்றம் அமைகிறது எனலாம்.

கேள்வி:

மாகாணசபை தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் மலையகத்தில் நீங்கள் சாதிக்க விரும்புவது என்ன?

பதில்:

புதிய ஜனநாயகக் கட்சியோ, அது அங்கம் வகிக்கும் புதிய இடதுசாரி முன்னணியோ எல்லா மக்களுடைய அவலங்களையும் போக்க அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்துவது அவசியம் என்ற கொள்கையையே கொண்டுள்ளது. அம்மாற்றங்களை ஏற்படுத்த ஜனநாயக வெகுஜன போராட்டப் பாதையே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதற்காக வகுக்கப்பட்டுள்ள வேலைத் திட்டத்தை மக்களிடம் முன்னெடுத்துச் செல்ல எல்லா மட்டங்களிலுமான தேர்தல்களிலும் கலந்து கொள்ளும் என்று புதிய இடதுசாரி முன்னணியின் வேலைத் திட்டம் கூறுகிறது. அதே போன்று மலையகத்திலும் நாம் வெறும் வாக்குறுதிகளை முன்வைத்துக் கொண்டு மாகாணசபை தேர்தலில் போட்டியிடப் போவதில்லை. மலையகத்தில் புதிய தலைமைத்துவத்தை கட்டிவளர்க்க மக்களை அணிதிரட்டும் ஒரு வேலை முறையாகவே நாம் தேர்தலில் போட்டியிடுகிறோம்.

மலையக மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கவும் அவர்களின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யவும் வேண்டும் என்று புதிய இடதுசாரி முன்னணியின் வேலைத்திட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. மலையக மக்களின் இனரீதியான வர்க்க ரீதியான அடக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்கள் தனியே மலையக மக்களுக்கு மட்டுமே உரியனவாக்கப்படாமல் ஏனைய மக்களுடைய ஆதரவையும், அங்கீகாரத்தையும் பெற்று முன்னெடுப்பதற்கான அடிப்படையை புதிய இடதுசாரி முன்னணி ஏற்படுத்தியுள்ளது. சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையக தமிழ் மக்கள் அனைவரும் சமமாக ஐக்கியப்படக் கூடியதாகவே அதன் வேலைத்திட்டம் அமைந்துள்ளது.

அவ்வேலைத் திட்டத்துடன் மலையக மக்களையும் அணிதிரட்டு வதற்கான தலைமைத்துவத்தையும் கட்டிவளர்ப்பதற்காகவும் மாகாணசபை தேர்தலினூடாக சில பங்களிப்புகளை செய்வதற்காகவே நாம் மாகாணசபை தேர்தலில் போட்டியிடுகிறோம்.

அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சியாக விளங்கும் புதிய இடதுசாரி முன்னணியின் மேசை சின்னத்துக்கு மலையக மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

கேள்வி:

உங்களது மாக்சிய பார்வையில் இன்றைய மலையக அரசியலை எவ்வாறு விளக்குவீர்கள்?

பதில்:

ஐ.தே. கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி (சுதந்திரக் கட்சி) ஆகியவற்றில் இணைந்து கொண்டு அரசியல் செய்யும் மலையகத்தவர்கள் அக்கட்சிகளின் முதலாளித்துவ, பேரினவாத கொள்கைகளுக்கும், நடைமுறைகளுக்கும் கட்டுப் படுத்தப்படுகின்றனர். அதனால் அக்கட்சிகளினால் முன்னெடுக்கப் படுகின்ற பல திட்டங்கள் மலையக மக்களுக்கும் பாதிப்பை தருவதாக இருந்தும், அவற்றை நியாயப்படுத்துவது மட்டுமன்றி அவற்றுக்கு துணைபோகின்றனர். ஊவா மத்திய மாகாணங்களில் மாகாணசபைகள் ஆரம்பிக்பட்டது முதல் மலையக மக்கள் தமிழ்க் கல்வித்துறைக்கு பொறுப்பான அமைச்சர்களாக இருந்தனர்..ஆனால் மலையக தமிழ்பாடசாலைகளில் இன்னும் ஆசிரியர் பற்றாக்குறை தீரவில்லை. மருத்துவ துறைக்கு படிக்க விரும்பும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு தேவையான ஆசிரியர்கள் மலையகப் பாடசாலைகளில் இல்லை. அதனால் மாணவர்கள் கொழும்பு, மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கே செல்ல வேண்டியிருக்கிறது.

எனவேதான் இவ்வகையான பெரிய கட்சிகளில் ஒட்டிக்கொண்டு அவற்றின் தயவில் நடத்தும் அரசியலை மலையக மக்கள் நிராகரிக்கின்றனர்.

தனியொரு அமைப்பாக இயங்கி வந்த இலங்கை-இந்திய காங்கிரஸ் 1950ல் அதன் பெயரில் இருந்த 'இந்திய' என்ற சொல்லை அகற்றியதற்கு காரணம் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களை 'இந்தியர்கள்' என்று அழைப்பதாலேயே ஆகும்.

ஆனால் இன்று இந்திய வம்சாவளி என்பதற்குப் பதிலாக எல்லா இந்திய வம்சாவளி மக்களையும் மலையக மக்கள் என்று அழைக்கப்பட வேண்டும் என்ற கருத்து மேலோங்கி வருகிறது. இக்காலகட்டத்தில் பல தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து அவற்றின் அமைப்பிற்கு 'இந்திய வம்சாவளி மக்கள் பேரணி' என்று பெயரிட்டுள்ளன. அதாவது 48 வருடங்களுக்குப் பின்னர் 'இந்தியர்' என்ற சொல்லை மீண்டும் அணைத்துக் கொண்டதன் மூலம் மலையக தொழிற்சங்கங்கள் அவற்றின் வங்குரோத்துத்தனத்தை வெளிப் படுத்தியுள்ளன. அரசியல் ரீதியாக மலையக மக்களுக்கு தலைமை கொடுக்க முடியாததால் 'இந்தியர்' என்ற ரீதியில் இனவாதப் பாதையில் மக்கள் விரோதப் பயணத்தை தொடர முயற்சிக்கின்றன.

மலையகத்தில் இன்று தனியொரு தொழிற்சங்கமொன்றின் ஏகபோகமும் முறியடிக்கப்பட்டுள்ளது. தனியொரு தொழிற்சங்கம் மலையக மக்கள் அனைவரையும் குத்தகைக்கு எடுத்துக் கொள்ள முடியாது என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது. பாரம்பரிய தொழிற்சங்க வேலை முறையும் காலாவதியாகி விட்டது. நீண்ட நாட்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை செய்தும் 105.00 சம்பளத்தை பெறமுடியாமல் போய் விட்டது என்பது பாரம்பரிய தொழிற்சங்க முறைமைக்கு விழுந்த பாரிய அடியாகும்.

முதலாளித்துவ, பேரினவாத கட்சிகளை ஒட்டிக்கொண்டு பெயரளவிலான பாராளுமன்றத்தில் 10 எம்பிக்கள் குந்தியிருப்பதால் பாராளுமன்ற முறைமையாலும் மலையக மக்களின் துயரம் துடைக்கப்பட மாட்டாது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று உண்மையும், நேர்மையுமின்றி செங்கொடிகளை பிடித்துக் கொண்டிருப்பதனாலோ, பாராளுமன்றப் பாதையில் மூழ்கிவிடுவதாலோ மலையக மக்களுக்கு நன்மை ஏதும் ஏற்படாது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவேதான் புதிய ஜனநாயகக் கட்சியின் அது அங்கம் வகிக்கும் புதிய இடதுசாரி முன்னணியூடாக மலையகத்திலும் புதிய தலைமைத்துவத்தை மாற்று இடதுசாரி தலைமைத்துவத்தை கட்டி வளர்ப்பதுடன் அதனை நாடளாவிய புதிய தலைமைத் துவத்துடன் இணைக்கவும் அதனூடாக மலையக மக்களினது உரிமைகளையும் வென்றெடுக்கவும் முடியும் என்ற நம்பிக்கையை கொண்டுள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி

செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

PUTHIYA POOMI புதியபூமி

சுற்று 05 ஜூலை 1998 பக்கம்-8 விலை ரூபா 10/= சுழற்சி 21

# இந்திய வம்சாவளி மக்கள் பேரணி யாருக்கு?

மாகாணசபை தேர்தல் பற்றி பேசப்பட்டதுடன் இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்றவொரு அமைப்பு பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வெளிவரத் தொடங்கின. அதற்கு மூலகர்த்தா பி.பி. தேவராஜ் எம்.பி. 14 தொழிற்சங்கங்களின் கூட்டாக மேற்படி பேரணி அமைக்கப்பட்டதாக கூறப்பட்டது. தேர்தல் ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெறமுடியாமல் போனதால் தொழிலாளர் தேசிய சங்கத்தின் மயில் சின்னத்தில் போட்டியிடுகிறார்கள்.

இ.தொ.கா. விற்கும் அதிலிருந்து வெளியேற்றப்பட்டு தற்போது இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரசின் தலைவராக இருக்கும் செல்லச்சாமிக்குமிடையே எழுந்துள்ள உரிமைப்பிரச்சினையை இன்னும் நீதிமன்றம் தீர்க்காதபடியால் இ.தொ.கா. அதனது சேவல் சின்னத்தில் போட்டியிட முடியாதுள்ளது.

அதைவிட கடந்த உள்ளூராட்சி தேர்தலில் ஏற்பட்ட சரிவினாலும், சம்பள உயர்வு போராட்டத்தில் அடித்த பல்டியினாலும் இ.தொ.கா உட்பட எல்லா தொழிற்சங்கங்களும் மலையக மக்களின் செல்வாக்கை இழந்துள்ளன. அவை தனித்தனியே மக்கள் முன் போக முடியாதிருந்தன. மாகாண சபைக்கான நியமனப்பத்திரங்கள் கோரப்பட்ட பிறகு மக்கள் முன் போவதற்கான ஒரு போர்வையாக வந்து சேர்ந்ததுதான் 'இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்ற அமைப்பு. அதன் சிற்பியான கொழும்பு மாவட்ட எம்.பி. பி.பி. தேவராஜ். இப்பேரணியை தேர்தல் கூட்டல்ல என்று பலமுறை எடுத்துக் கூறினாலும் அதன் பிறப்பே தேர்தல் கூட்டு என்பதற்கு ஆதாரமாகிறது.

அப்பேரணிக்கான வேலைத்திட்டம் எதுவுமில்லை. அக்கூட்டணியில் இருப்போரிடம் கதைத்துப் பார்த்தபோது மலையக மக்களுக்கு அதிகார பரவலாக்கலில் பங்கு கேட்பதற்கு கூட துணிய மாட்டார்கள் என்பது தெளிவானது. அத்துடன் மலையகத்தில் வாழும் (இந்திய வம்சாவளி) தமிழ் மக்களையும் ஏனைய இடங்களில் வாழும் தமிழ் மக்களையும் இந்திய வம்சாவளி தமிழர்கள் என்றே அழைக்க வேண்டும் என்பதில் மிகவும் விடாப்பிடியாகவே இருப்பது தெரிந்தது.

இந்நாட்டில் வாழும் எல்லா இந்திய வம்சாவளி தமிழ் மக்களையும் மலயக மக்கள் என்றே அழைக்க வேண்டும் என்ற கருத்து மிகவும் மேலோங்கி இருக்கும் போது 'இந்தியர்கள்' என்று அழைக்க வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பது திண்ணம். இந்திய வம்சாவளி பேரணியில் இருக்கும் அதிகமான தொழிற்சங்கங்களின் மூலம் இ.தொ.கா. ஆகும். (இ.தொ.கா.) இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்று பெயரிட்டதன் காரணம் என்னவென்றும் அத்தொழிற்சங்கத் தலைவர்களுக்கு நினைவிருக்கலாம். இலங்கை–இந்திய காங்கிரஸ் என்ற பெயர் 1950இல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பெயர் மாற்றம் செய்யப்பட்டட அந்த மாநாட்டு அறிக்கையின்படி 'இந்திய' என்ற சொல் இந்திய வம்சாவழி மக்களை அந்நியப்படுத்திக் காட்டுவதாக இருப்பதாலும் இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் இந்திய வம்சாவழி மக்கள் கலபப்தற்கு தடையாக இருப்பதாலும் அச்சொல் அகற்றப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. எந்தச்சொல் 48 வருடங்களுக்கு முன்னர் அகற்றப்பட்டதோ அதேசொல் தற்போது அமைப்பிற்கு பெயராக வந்துவிட்டது.

48 வருடங்களுக்கு முன்னர் இலங்கை நீரோட்டம் பற்றி சிந்தித்த மலையக தலைவர்களுக்கு தற்போது மட்டும் சிந்திக்க முடியாது போனதேன்? மக்களோ கடந்த 48 வருடங்கள் பின்நோக்கிச் சென்றுள்ளனர். மக்களோ தாம் இந்நாட்டு பிரஜைகள், ஒரு தனியான தேசிய இனம், தங்களை மலையக தமிழ் மக்கள் என்றே அழைக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

அந்த வளர்ச்சிக்கு முன்னால் நின்று பிடிக்க முடியாததால் 'இந்தியர்கள்' என்ற அந்நியத்தை அடிப்படையாகக் கொண்டு இனவாத நோக்கத்தில் மக்களிடம் சென்று மீண்டும் செல்வாக்கை பெற முயற்சிப்பதன் விளைவே இந்திய வம்சாவளி பேரணி. மலையக தமிழ் மக்கள் என்ற அடையாளத்துடன் இந்நாட்டின் ஏனைய தேசிய இனங்களுடன் ஐகசியப்பட தயாராக இருக்கும்போது ஏனைய தேசிய இனங்களும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளபோது பி.பி. தேவராஜும் அவரோடிருக்கும் சிலரும் சேர்ந்து 'இந்தியர்' என்ற சொல்லை இறுக்கி பிடிப்பதன் நோககம் வேறென்னவாக இருக்க முடியும். மலையக மக்களில் பெரும் பான்மையாக இருக்கும் தோட்டத் தொழிலாளர்களை கடுமையாக சுரண்டி அடக்கிக் கொண்டிருக்கும் தனியார் கொம்பெனிகள் பற்றி சரியான நிலைப்பாடில்லை. நாட்டின் இனப்பிரச்சனைக்கான தீர்வு திட்டத்தில் மலையக மக்களுடைய இனத்துவம் தனனடையாளம் என்பவற்றை பாதுகாக்கும் அம்சங்கள் இடம்பெற வேண்டும் என்பதில் ஒரு சரியான தெளிவில்லாமல் அமைக்கப்படும் கூட்டணியால் என்ன பயன்?

மேற்படி இரண்டு முக்கிய விடயங்களிலும் மக்களின் பக்கத்தில் இந்திய வம்சாவளி மக்கள் பேரணி இருக்கப்போவதில்லை. தனியார் கம்பெனிகளை எதிர்க்கும் திராணி அதன் தலைவர்களிடம் இல்லை. மலையக மக்களின் இனத்துவத்தை பாதுகாப்பதில் சரியான முடிவெடுக்க முடியாதும் இருக்கும். ஏனெனில் அதன் தலைவர்கள் ஆளும் கட்சியின் அல்லது எதிர்க்கட்சியின் தயவில் வாழவே திடசங்கற்பம் செய்துள்ளனர். மேற்படி இரண்டு முடிவுகளையும் அவர்களின் வரலாறும் தற்போதைய நிலைப்பாடும் என்பவற்றின் அடிப்படையில் எடுக்கலாம்.

இது இவ்வாறிருக்க இப்பேரணிக்கு தோட்டக் கம்பெனிகளின் ஆசீர்வாதம் கிடைத்துள்ளது. ஏனெனில் தோட்டத்துறையில் தொழிலாளர்களின் உரிமைகளை குறைத்து வரையறுக்கும் கூட்டு ஒப்பந்தமொன்றை செய்து கொள்ள தோட்ட தொழிற்சங்கங்கள் ஓரணியாக இருப்பது அவசியமாகும். கூட்டு ஒப்பந்தம் செய்த கொள்வதற்கான

## மலையக மக்களுக்கா? கம்பனிகளுக்கா?

நடவடிக்கைகளை இலகுவாக நிறைவேற்ற முடியும் என்றும் அதன் தலைமை இ.தொ.கா. விடம் இருப்பதாலும் தமக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுக்க முடியும் என்றும் தோட்டக் கம்பெனிகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் இலங்கை முதலாளிமார் சம்மேளனம் கருதுவதாக தெரிகிறது. தொழிற்சங்கங்கள் தனித்தனியாக இயங்கும் போது கூட்டு ஒப்பந்தத்தில் இணக்கத்திற்கு வருவது கடினம். ஏனெனில் ஒன்றைவிட இன்னொரு தொழிற்சங்கம் தொழிலாளர்களிடம் செல்வாக்கை நிலைநாட்டி தொழிலாளர்களுக்கு கூடிய உரிமைகளை கோரலாம். தனித்தனியாக இருந்தால் எல்லாவற்றையும் இணங்கச் செய்வதும் எல்லாவற்றினது கையெழுத்தையும் பெறவேண்டியது அவசியம் என்றும் அது கருதுகிறது.

தொழிற்சங்கங்கள் ஒரு கூட்டணியாக இருந்து அதன் தலைமை இ.தொகா விடம் இருந்தால் அதனுடன் கொடுக்கல் வாங்கல செய்வதும், கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பத்தை வாங்குவதும் இலகுவாகும். கூட்டணிக்குள் முரண்பாடு இருந்தாலும் தலைமையுடன் இணக்கம் ஏற்படின் கூட்டு ஒப்பந்தத்தை செய்த கொள்ளத் தடையேதும் இல்லை எனஙும் முதலாளிமார் சம்மேளனம் நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே இக் கூட்டணி உருவாகுவதில் தோட்டக் கம்பெனிகளுக்கு அலாதிப் பிரியம்.

தோட்டக் கம்பெனிகளின் அதிகமான பங்குகளை இந்தியக் கம்பெனிகள் வாங்கியிருப்பதால் அவற்றின் விருப்பத்தின் பேரிலும் இக் கூட்டணியும் அதன் பெயரும் உருவானதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றது.

மலையக மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்துள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐ.தே.கட்சி அதனது செல்வாக்கை மலையக மக்கள் மத்தியில் நிலை நிறுத்துவதை விரும்பவில்லை. மலையக மக்கள் மத்தியில் நிலை நிறுத்துவதை விரும்பவில்லை. மலையக மக்கள் மத்தியில் ஐ.தே.கட்சி செல்வாக்கை நிலைநிறுத்துவதை தடுத்து நிறுத்த மலையக தொழிற்சங்கங்கள் அனைத்தையும் இணைக்கும் கூட்டணியொன்றின் அவசியத்தை பொதுஜன ஐக்கிய முன்னணியும் உணர்ந்திருக்கிறது. அத்தேவையை இந்திய வம்சாவளி மக்கள் பேரணி பூர்த்தி செய்யும் என்று அரசாங்கம் நம்புகிறது. எனவே இன்னொரு பக்கத்தில் அரசாங்கத்தின் ஆசீர்வாதமும் இப்பேரணிக்கு கிடைத்துள்ளது.

எனவே இப்பேரணி ஒரு பக்கத்தில் தோட்டக் கம்பெனிகளின் சுரண்டலை இலகுவாக்குவதற்கும் இன்னொரு பக்கத்தில் அரசாங்கத்தின் விருப்பத்தையும் பூர்த்தி செய்வதாகவும் இருக்கப் போகிறது என்பதில் ஐயமில்லை. நிச்சயமாக மலையக மக்களது அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்காக எதனையும் செய்யப் போவதில்லை.

# அய்யாத்துரை பூ வைக்கப் பார்க்கிறார்!

இந்திய வம்சாவழி மக்கள் பேரணி என்ற கூட்டணிக்கு அய்யாத்துரையின் சங்கத்தின் மயில் சின்னமே கைகொடுக்கிறது. மலையகத்தில் மாகாண சபையில் தேர்தலில் சில மாவட்டங்களில் மேற்படி தொழிறசங்கக் கூட்டணி போட்டியிடுகிறது. செல்லச்சாமி இ.தொ.கா.வின் சேவல் சின்னத்தை பறித்துக் கொண்டுள்ளதால் இ.தொ.கா. தலைவரும், அமைச்சரும் மேற்படி பேரவையின் தலைவருமான தொண்டமான் மயில் சின்னத்தையும் அய்யாத்துரை யையும் பயன் படுத்துகிறார்.

அதை புரிந்தோ புரியாமலோ இந்திய வம்சாவழி மக்கள் பேரணிக்காக அய்யாத்துரை நிறையவே வக்காளத்து வாங்குகிறார். அம்முன்னணி ஒரு இனவாத முன்னணி இல்லை என்று கூறியது மட்டுமல்ல இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி என்பனவும் அம்முன்னணியில் அங்கம் வகிப்பதாக கூறுகிறார். அதுமட்டுமல்ல நவசமசமாஜக் கட்சியும் (வாசுதேவ நாணயக்கார பிரிவு) இணைந்துள்ளதாகவும் கூறுகிறார்.

மேற்படி கட்சிகள் இடம்பெறுவதாக கூறி பொய்யை உண்மையாக்க அய்யாத்துரை ஏன் உளற வேண்டும்? வாசுதேவ நாணயக்கார ல.ச.ச. கட்சியில் இருப்பது கூட தெரியாமலா நவசமசமாஜக்கட்சியில் (வாசுதேவநாணயக்கார பிரிவு) இருப்பதாக கூறி எவ்வளவு காலம் அரசியல் செய்யப் போகிறார்.

தோட்டத் தொழிலாளர் காதுகளில் பூ வைக்க நினைப்பதன் விளைவாகவே அவர் இப்படி கதைக்கிறார். முடிந்தால் செய்து பார்க்கட்டும்.

# புதிய வகை குவாட்டஸ்கள்

சில தோட்டங்களில் தொழிலாளர்கள் வாழ்ந்த லயங்கள் அவற்றை சுற்றியிருந்த வீட்டுத் தோட்டங்கள் என்பவற்றை விட்டு தொழிலாளர்கள் திட்டமிட்டு வெளியேற்றப் படுகின்றனர். அவர்கள் வாழ்ந்த சூழ் நிலையிலிருந்து வெளியேற்றப்பட்டு வீட்டுத் தோட்டங்கள், மாட்டுப்பட்டிகள் ஏற்படுத்த முடியாத இடங்களில் 'குவாட்டஸ்' என்ற பெயரில் 'வீடுகள்' கட்டிக் கொடுக்கப் படுகின்றன.

தொழிலாளர்கள் வீட்டுத் தோட்டம் செய்த இடங்கள் பண்பட்டு இருப்பதால் புதிதாக ஏற்றுமதிக்காக தோட்டக் கம்பெனிகளால் பயிரிடப்படும் பூக்கள், காளான்கள் என்பவற்றை அவ்விடங்களில் பாரிய அளவில் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் தொழிலாளர்களின் செறிந்த குடியேற்றத்தை சிதைத்து திக்கிற்கு ஒரு குடும்பமாக வாழ வழி செய்வது இன்னொரு நோக்கமாகும்.

குவாட்டஸ் என்று 'தோட்டக் கம்பெனிகளால் கட்டிக் கொடுப்பனவற்றிற்கு நீர் இல்லை, மலசலகூடமில்லை, வீட்டை சுற்றி கழிவுநீர் செல்ல கால்வாய் (கான்) இல்லை. வீடமைக்கக் கூடிய மண்ணில் கட்டப்படாமல் சதுப்பு நிலங்களில்' கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை தமிழர்களைக் கொண்ட இலங்கைக் கம்பனிக்கு சொந்தமாக பூண்டுலோயாவில் இருக்கும் ஒரு தோட்டத்தில் மேற்படி வேலைகள் மிகவும் வேகமாக செய்யப்படுவதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

வெளியிடுபவர்: இளையதம்பி தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்கட், கொழும்பு, ... (பிறை) லிமிட், 98, விவேகானந்த மேடு கொழும்பு 13.